விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 27 வெள்ளிக்கிழமை (11.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 82

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர
தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது




## பீற்றர் ஹரோல்டிற்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

### கொடும்பாவியும் எரிப்பு

(கொழும்பு)

உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்டின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியிருந்தது.

இந்த இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலத்திற்கு ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பிரமுகர் எல்லே குணவன்ச தேரர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசுடன் ஒப்பந்தம் செய்யுமுன்பே புலிகளிடம் விமானங்கள் இருந்தன

## அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் தகவல்

(லண்டன்)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே போர்நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுவதற்கு முன்னரே விமானங்களும் விமான ஓடுபாதையும் விடுதலைப் புலிகளிடம் இருந்தது என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் குழுவினர் நேற்று வெளிநாடு பயணம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்று காலை 9.20 மணியளவில் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இவர்கள் நோர்வே, சுவீடன், பின்லாந்து, நெதர்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, அயர்லாந்து, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளனர். சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கைச் சேர்ந்த மக்களுக்கான நிவாரணங்களை நேரடியாகவும் செயற்திறன் மிக்க முறையிலும் பகிர்ந்தளிப்பது குறித்து இந்த விஜயத்தின்போது கலந்துரையாடப்படும் என விடுதலைப் புலிகளின் சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி இராணுவ முகாமிலிருந்த சிப்பாய் வயோதிபப் பெண் மீது வல்லுறவு முயற்சி

### கிளர்ந்தெழுந்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனியே இருந்த 63 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரை இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முற்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று நண்பகல் நீர்வேலி தெற்கு வில்லு மதவடியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, பிரஸ்தாபப் பெண் ஓய்வூதியம் எடுத்துக் கொண்டு மதியம் வீடு திரும்பியுள்ளார். பின்னர் சமையலறைக்குச் சென்று சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளார். அப்போது அருகிலிருந்த வில்லு மதவடி இராணுவ முகாமிலிருந்த இராணுவச் சிப்பாய்கள் இருவர் வீட்டினுள்ளே நுழைந்து, ஒரு சிப்பாய் அவரை வேறொரு அறைக்குள் இழுத்துச் சென்று வாய்க்குள் துணிகளை அடைத்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயன்றுள்ளார்.

அச் சிப்பாயின் பிடியிலிருந்து தப்பிக் கொண்ட அப்பெண் கூக்குரலிடவே பிரஸ்தாபச் சிப்பாய்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து ஒன்றுகூடிய அப்பகுதி மக்கள் அவர்களை பிடிப்பதற்கு துரத்திச் சென்றனர். அப்போது அச் சிப்பாய்கள் இருவரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் ஏறி தப்பிச் சென்றனர். பின்னர் ஆட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி நீர்வேலி முகாமுக்குத் திரும்பினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்றுக் ஹர்த்தால்

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனைப் பிரதேசங்களில் [illegible] முஸ்லிம்கள் துக்கம் அனுஷ்[illegible]ால் அந்தப் பிரதேசங்களின் இயல்பு [illegible] பாதிக்கப்பட்டிருந்தது.

ஓட்டமாவடியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான அப்துல் ஹமீட் முஹமது ரஹீம் என்பவர் கடந்த 7 ஆம் திகதி மாலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாகரைப் பகுதியில் இனந்தெரியாத ஆயுதப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவத்தைக் கண்டித்தும் கொல்லப்பட்டவருக்கு அனுதாபம் தெரிவித்தும் நேற்றும் இன்றும் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு இந்தப் பிரதேசத்திலுள்ள பொது அமைப்புக்கள் பள்ளிவாசல்களின் ஊடாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவின் விலை 30 ரூபாய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மாவின் அதிகூடிய சில்லறை விலையாக 30 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மக்களின் கோதுமை மாவின் நுகர்ச்சி தேவையை கருத்தில் கொண்டு அதன் விலை அதிகரிப்பை தீர்க்கும் முகமாக இவ் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருத்தப்பட்ட ஆறு யுத்த விமானங்கள் நேற்று விமானப் படையிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானால் திருத்தம் செய்யப்பட்ட ஆறு தாக்குதல் விமானங்கள் இலங்கை விமானப் படையிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான இந்த விமானங்கள் கடந்த 2003 ஆம் ஆண்டு திருத்த வேலைகளுக்கென பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டது. அவையே நேற்று மீள வழங்கப்பட்டுள்ளன.

விமானங்களை கையளிக்கும் நிகழ்வு கட்டுநாயக்க விமான படைமுகாமில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயார் சிவ் மார்ஷல் கலீம் சதாவ் மற்றும் இலங்கை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

1991 ஆம் ஆண்டு சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விமானங்களினுள் எவ்.ரி. 5, எவ்.ரி. 7, எவ்.ரி.எவ் 7 ரக விமானங்கள் அடங்குகின்றன. இவற்றின் வேகம் ஒலியை விட இரு மடங்கு அதிகமானதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-08)

EXPOAIR
Your friend in the skies...
யாழ் தினசரி விமான சேவை
கொழும்பு எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
யாழ்ப்பாணத்தில் 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: jaffna @ expoavi.com, resaervations @ expoavi. com,

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரச சார்பற்ற நிறுவனங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட வீடுகள் வசிப்பதற்கு உகந்ததல்ல

## கடற்றொழில் அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசியல்வாதிகள் சிலரும், அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவும் சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களுக்காக அமைத்துக் கொடுத்த வீடுகள் வசிப்பதற்கு உகந்தவையல்ல என கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஹிக்கடுவ மீன் பிடித்துறை முகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு நிரந்தர வசிப்பிடங்கள் உரிய முறையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

அரசாங்கத்தின் சில நிறுவனங்களின் செயற்றிறன் இன்மை காரணமாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மீனவருக்கு வீடுகளை அமைக்கும் திட்டம் தாமதமடைகின்றது.

பாதிக்கப்பட்ட மீனவருக்கு காணிகளை ஒதுக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கூறினேன். மீனவர்களை கடலிலிருந்து நீண்ட தூரத்திற்கு அப்பால் அழைத்துச் செல்லமுடியாது.

இதனால் காணிகளை முதலில் அடையாளம் கண்டு அவற்றில் மீனவர்களை குடியேற்றக் கூடிய இடங்களை வேறுபடுத்தித் தருமாறு கூறுகின்றேன். இந்த நடவடிக்கைகளை அரசு பொறுப்புடன் மேற்கொள்ளவில்லை. 100 மீற்றருக்குள் வாழ்ந்த மக்களுக்கான காணிகளை ஒதுக்குவதற்குக் கூட அரசினால் முடியாமல் போயுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

(ற-8)

# பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி முப்படைத் தளபதிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி ஏயார்வை மார்ஷல் கலீம் சதாத் நேற்றுமுன்தினம் முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

முதலில் விமானப்படைத் தலைமையகத்துக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு விமானப் படைத்தளபதிக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. பின்னர் இரு நாடுகளின் விமானப்படைத் தளபதிகளும் கலந்துரையாடினர்.

பின்னர் கடற்படைத்தலைமையலுவலகத்துக்குச் சென்று கடறபடைத் தளபதியை சந்தித்துக் கலந்துரையாடினார். தொடர்ந்து இராணுவத் தளபதியை சந்தித்துக் கலந்துரையாடினார். கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி இராணுவ உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகப் பேச்சு நடத்தியிருந்தார்.

அதன் ஒரு கட்டமாகவே விமானப்படைத்தளபதி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயககவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது ரட்ணசிறி விக்கிரமநாயக்க விடுதலைப்புலிகளின் விமான அணி பற்றியும் தகவல் பரிமாறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-8)

# கல்குடாவில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

கல்குடா பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓட்டமாவடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் முஸ்லிம் வாலிபர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஹர்த்தால் நடவடிக்கை மேறகொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கண்காணிப்புக் குழுவினர் மற்றும் பொலிஸ் குழுவினர் இதுகுறித்து உடன் விசாரணையை ஆரம்பித்துள்ளதால் அதற்கு மக்கள் ஒத்துழைபபு வழங்க வேண்டும் என்று பொலிஸார் கேட்டுள்ளனர்.

இதற்கிடையில் வெலிகந்தையில் முஸ்லிம்கள் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டதாக வெளியான தகவல்களில் எந்த உண்மையும் இல்லை எனவும் வதந்திகளை நம்பி தவறான செயற்பாடுகளில் இறங்கவேண்டாம் எனவும் பொலிஸார் மக்களை வேண்டியுள்ளார்கள்.

(க-9)



புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தல் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற உப அதிபர் ஏ.தியாகராஜாவுக்கு மாணவர்கள் மலர்மாலை அணிவிப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் நா.பஞ்சலிங்கம், ஓய்வு பெற்ற அதிபர் ம.சுப்பிரமணியம், வட இலங்கை சர்வோதய பொறுப்பதிகாரி செல்வி.ச. புஸ்பமணி, அறங்காவலர் செல்வி ஜமுனாராணி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்:- புங்குடுதீவு நிருபர்)

# இராசிபலன்

**11.03.2005**
**மாசி 27, வெள்ளிக்கிழமை**
**உத்தரட்டாதி பி.இ. 3.42 மணிவரை**
**பிரதமை பி.ப. 2.14 மணிவரை**
**இராகுகாலம் 10.52 - 12.22 மணிவரை**
**சுபநேரம் 6.22 - 7.52 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | அமைதிக் குறைவு, எதிர்பாராத பிரச்சினை, காரிய தாமதம், வேலைப்பளு. |
| இடபம் | எடுத்த காரியம் கைகூடும், தெய்வசிந்தை, விருந்துபசாரம், நல்ல செய்தி. |
| மிதுனம் | தேக ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | குடும்பக் கவலை, பணக் குறைவு, ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம். |
| சிங்கம் | மாதா சுகம், முயற்சி தாமதம், புதிய விடயம் அறிவித்தல், மனச் சோர்வு. |
| கன்னி | கூட்டு முயற்சி, உறவினர் வருகை, பண வருவாய், கீர்த்தி. |
| துலாம் | விவாதம், பண விரயம், காரிய தாமதம், கோபப்படுதல். |
| விருச்சிகம் | தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, நல்ல செய்தி, புதிய முயற்சி. |
| தனுசு | இடமாற்றம், திடீர் நன்மை, சுப செலவு, அமைதிக் குறைவு. |
| மகரம் | பெருமையடைதல், போசன நன்மை, கலந்துரையாடல், தெய்வ சிந்தை. |
| கும்பம் | அதிகாரம், நல்ல முயற்சி, பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| மீனம் | புதிய திட்டமிடல் பிதா சிந்தை, பிரயாணம், காரிய தாமதம். |

**பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது**
**-வளவன்**

# வீரவணக்கம்

(கிளிநொச்சி)

கடந்த 5 ஆம் திகதியன்று கிரிமிச்சைப் பகுதியில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

2 ஆம் லெப்டினன் புஸ்பராஜ் என அழைக்கப்படும் இவர் வாகனேரி மட்டக்களப்பைச் சொந்த முகவரியாகவும், வாழைச்சேனை மட்டக்களப்பை தற்காலிக முகவரியாகவும் கொண்ட காந்தமகாராஜா உதயகுமார் என்பவராவார்.

இம் மாவீரருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (க-64)

# வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் மணற்காடு குடத்தனைப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு ஒருதொகை வீடுகள் யு.என்.எச்.சி.ஆர். நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டன.

இதேவேளை, குடத்தனை அ.த.க.பாடசாலைகளில் உள்ள மக்களிற்கு வீடுகள் அமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-51)

# மூதூரில் ஆர்ப்பாட்டம்

(மூதூர்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

200 மீற்றர் கடல் வலயப் பாதுகாப்புச் சட்டத்தை இரத்துச் செய்து பழைய இடத்தில் தங்களைக் குடியமர்த்தக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

மூதூர் இறங்குதுறையிலிருந்து பிரதேச செயலகம வரை இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. (ற)

# லொறி விபத்தில் இருவர் பலி

(புத்தளம்)

மன்னாரிலிருந்து மீன் ஏற்றிக்கொண்டு நீர்கொழும்பு நோக்கிச்சென்ற லொறி, ஆனமடுவ பள்ளப் பகுதியல் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதால், இருவர் ஸ்தலத்தில் பலியானதுடன், மேலும் ஒருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. விபத்தில் பலியானவர் பமுனுவ டபிள்யூ. ஜீட், ஜயன்த ஜீட் ஆகியோர் என பள்ளம பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமானவர்களும் படுகாயமுற்றவரும் லொறியில் பயணம் செய்துவந்தனர் என பள்ளம பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் ஜயதிலக தெரிவிக்கார். (ஈ-15)

# சுவரொட்டி




உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹரோல்டைக் கண்டித்து அவரை ஒரு 'வெள்ளைப் புலி' என வர்ணித்து தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் நேற்றுமுன்தினம் கொழும்பின் சில பகுதிகளில் ஒட்டியிருந்த சுவரொட்டிகளைப் படத்தில் காணலாம்.

## பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக் கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல்சார் இணக்க உடன்படிக்கை

**உறுப்புரை 11.(1)**

**ஈ.சமநலன்கள் உட்பட சம ஊதியத்திற்கான உரிமையும் சம பெறுமானமுடைய வேலை தொடர்பில் சம நடத்துகைக்கான உரிமையும் அத்துடன் வேலையினது பண்புத்தர மதிப்பீட்டில் சமத்துவமான நடத்துகையும்.**

**மிகுதி நாளை.**

# பொன் அணிகளின் மோதல் இன்றும் நாளையும்


யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 88வது வருட கிரிக்கெற் போட்டி இன்றும் நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி "பிக்னல" விளையாட்டு மைதானத்தில நடைபெறவுள்ளது. பொன் அணிகள் மோதல் (Battle of the golds) என அழைக்கப்படும் இப்போட்டி இரு தினங்களும் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். இவ்வருடம் புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கு யே.சுரேன் என்பவரும், யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கு எஸ்.தனாரனும் தலைமை தாங்குகின்றனர்.

இதுவரை ஆண்டுகளும் நடைபெற்ற போட்டிகளில் புனித பத்திரிசியார் கல்லூரி அணி 29 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி 15 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன. 24 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. மிகுதிக்கான விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. (REST NOT Available)

இவ்வாண்டு புனித பத்திரிசியார் கல்லூரி அணி பங்குபற்றிய போட்டிகளில் மூன்று போட்டிகள் வெற்றிகொள்ளப்பட்டன. மூன்று போட்டிகள் வெற்றிதோல்வியின்றி முடிவடைநதன. இரண்டு போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் கைவிடப்பட்டன. யாழ்ப்பாணக்கல்லூரி பங்குபற்றிய போட்டிகளில் ஒன்றில் வெற்றியும், மூன்று போட்டிகளில் தோல்வியும், இரண்டு போட்டிகள் வெற்றி தோல்வியுமின்றி முடிவடைந்தன.

இரண்டு அணிகளும் திறமையானதும் சிறப்பானதுமான விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ளன.

கடந்த ஆறு ஆண்டுகளாக பொன் அணிகள் மோதலை தொடர்ந்து வெற்றி கொண்டுவரும் புனித பத்திரியார் கல்லூரி அணி இவ்வருடமும் வெற்றியைத் தக்க வைததுக்கொள்ளுமா? என்பது யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சவாலைப் பொறுத்தும் அல்லது யாழ்ப்பாணக்கல்லூரி அணிக்கு வெற்றி திரும்புமுனையாக அமையுமா? என்பது ரசிகர்களின் பொறுமையில் நாளை தெரியவரும்.



புனித பத்திரிசியார் கல்லூரி அணி



யாழ்ப்பாணக் கல்லூரி அணி

### புனித பத்திரிசியார் கல்லூரி அணி




அணித்தலைவர்

இரணடாம் வருட வீர், விருது பெற்றவா். வலதுகை ஆரம்ப மத்திம வேகப்பந்துவீச்சாளர். பந்தை அடித்தாடும் வலதுகை துடுப்பாட்ட வீர். அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 90 எதிர் யூனியன் கல்லூரி.

● **ஏ.யே.வின்சன்**-அணியின் உப தலைவர், மூன்றாம் வருட வீரர், வலதுகை துடுப்பாட்ட வீரா. பிரயோசனமான மாற்றுப் பந்து வீச்சாளர். அதி கூடிய ஓட்ட எண்ணிக்கை ஆட்டமிழக்காமல் 66 எதிர் யூனியன் கல்லூரி.

● **வி.விதுபாலா**- மூன்றாம் வருட வீரர். திறனுள்ள இடதுகை சுழல் பந்து வீச்சாளர். களத்தில் தரித்திருந்தால் ஓட்டங்களைப் பெறுவதில் வல்லவர். 2004ஆம் ஆண்டில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெற் சங்க 16 வயதிறகுட்பட்ட கிரிக்கெற அணியில் அங்கம் வகித்தவர்.

● **ரி.சுயந்தன்**-இரண்டாம் வருட வீரர். சிறந்த சகலதுறை ஆட்டக்காரன். திறமையான பந்து வீச்சாளர். அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 52 எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி.

● **வி.யே.லூட்சன்**- இரண்டாம் வருட வீரர். சகலதுறை ஆட்டக்காரர். வலதுகை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர். திருப்பு முனையை ஏற்படுத்தக்கூடிய மாற்றுப் பந்துவீச்சாளர். 2004 ஆம் ஆண்டில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெற் சங்க 16வயதிற்குட்பட்ட கிரிக்கெற் அணியில் அங்கம் வகித்தவர். அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை ஆட்டமிழக்காமல் 62 எதிர் கனகரத்தினம் ம.வி.

● **எஸ்.ஜெனன்ராஜ்**- இரண்டாம் வருட வீரர். வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரர். அதிரடி ஆட்டக்காரன். குறுகிய நேரததில் விரைவாக ஓட்டங்களைக் குவிபபதில் வல்லவர். 2004ஆம் ஆணடில் யாழ்.பாடசாலைகள் கிரிகெற் சங்க 16 வயதிற்குட்பட்ட கிரிக்கெற் அணியில் அங்கம் வகித்தவர்.

● **யே.ஜதீஸ்வரன்** -இரண்டாம் வருட வீரர். இலக்குக் காப்பாளர் அடித்தாடும் வலதுகை துடுப்பாட்ட வீரர். இவ்வருடம் பாடசாலை அணிக்காக பெறுமதியான ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்த வீரர். 2004ஆம் ஆண்டில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெற் சங்க 16 வயதிற்குடபட்ட கிரிக்கெற் அணியில் அங்கம் வகித்தவர்.

● **ஏ.ஜெயந்திரன்**- இரண்டாம் வருட வீரர். வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரர். நிதானமாக ஓட்டங்களைப் பெறுவதில் ஆர்வமுடையவர் முன்னிலை களத்தடுப்பாளர்.

● **பி.பத்மசரஸி**:- இரண்டாம் வருட வீரர். திறமையான களத்தடுப்பாளர். பயனுள்ள வலதுகை துடுப்பாட்ட வீரர்.

● **டபிள்யு,.ஐ.ஜக்சன்**:- அறிமுக வீரர். சதமடித்தவர். சகதுறை ஆட்டக்காரர். எடுப்பான இடதுகை மத்திய வரிசை துடுப்பாட்ட வீரன் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் என அழைக்கப்படுபவர். வலதுகை மத்திய வேகப் பந்துவீச்சாளர். 2004ஆம் ஆண்டில் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெற் சங்க 16வயதிற்குட்பட்ட கிரிக்கெற் அணியில் அங்கம் வகித்தவர். அணியில் அதிகூடிய எண்ணிக்கையாக ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களை யாழ். இந்துக்கல்லூரிக்கு எதிராகப் பெற்றவர்.

● **யே.அருன்**:- அறிமுக வீரர். பந்தை அடித்தாடும் வலதுகை துடுபாட வீர். வலது, இடதுகைகளினாலும் பந்து வீசக்கூடிய ஆற்றலுடையவர்.

● **யே.எவ்.கொலின்**:- அறிமுக வீரர். வலதுகை மத்திமவேக பநதுவீச்சாளர். சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர்.

● **ஜீனத்ராஜ்**:- அறிமுக வீரா. வலதுகை ஆரம்ப மத்திம வேக பந்து வீச்சாளர். வலதுகைதுடுப்பாட்டவீரர்

● **வ.ரஜீவ்**:- அறிமுகவீரர். வலதுகை துடுப்பாட்ட வீரன். பின்நிலை களத்தடுப்பாளர்.

● **ஏ.மரீனகுமார்**:- அறிமுக வீரர். வலதுகை சுழல்பந்து வீச்சாளர் வலதுகைதுடுப்பாட்ட வீரர்.

● **எஸ்.மிலான்டோ கிறிஸ்ரோ**:- அறிமுக வீரர். குழந்தை நட்சத்திரம் முன்னிலைக்களத்தடுப்பாளர்.

### யாழ்ப்பாணக் கல்லூரி அணி




அணித்தலைவர்

4ஆவது வருட நம்பிக்கையான வலதுகை நடுவ வரிசை துடுப்பாட்ட வீரன். இடதுகை ஆரம்பவேக பந்துவீச்சாளரும், சிறந்த பந்துத்தடுப்பாளரும்கூட. மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கெதிராக 15ஓட்டங்கள் கொடுத்து 8 விக்கெற்றுக்கள் வீழ்த்தியதே இவரின் சிறந்த பந்துவீ[illegible]ப் பெறுமதி.

● **யு.நிருபரன்**:- அணியி[illegible]ப தலைவா. 4ஆவது வருட [illegible]வமுள்ள வலதுகை அதிர[illegible] வேக நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர். இந்தப் பாருவகாலத்தில கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிராகப் பெற்ற 99ஆம், யாழ்.மத்திய கல்லூரிக்கு எதிராகப்பெற்ற 56உம் சிறந்த துடுப்பாட்டப் பெறுமதிகளாகும்.

● **கே.பெரியதம்பி**:- 2வருட அனுபவமுள்ள இடதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். நல்ல களத்தடுப்பாளர்.

● **யே.செந்தூரன்** :- 2ஆவது வருட இடதுகை நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை சுழற்பந்து வீச்சாளர்.

● **ஆர்.பாலு**:- 2ஆவது வருட வலதுகை துடுப்பாட்ட வீரர். களத்தின் எம்முனையிலும் நின்று பந்து தடுப்பதில் வல்லவர். வலதுகைப் பந்துவீச்சாளர்.

● **என.ஜனார்த்தனன்**:- அணிக்குப்புதியவர். ஊடுருவித் தாக்கும் வலதுகை ஆரம்பப் பந்து வீச்சாளர். வலதுகை அதிரடித் துடுப்பாட்ட வீரர். சிறப்பான களத்தடுப்பாளர். 15 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்றுக்கள் வீழ்த்தி சிறப்பான பெறுதியை கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு எதிராகப் பதிவு செய்தார்.

● **கே.சிவப்பிரகாசம்**:- புதியவர். பிரியோசனமான பந்து பரிமாற்றத்துக்குரியவர்.

● **ரி.பெரியதரன்** :- புதியவர். வலதுகை துடுப்பாட்ட வீரரும், வலதுகை சுழறபந்து வீச்சாளருமாவார்.

● **என்.சசிதரன்** :- புதியவர். வலதுகை துடுப்பாட்வீரர். பிரியோசனமான பந்து பரிமாற்றத்துக்குரியவர். களத்தின் எம்முனையிலும் நின்று பந்து தடுப்பதில் வல்லவர்.

● **என்.றுபதாஸன்** :- புதியவர் வலதுகை துடுப்பாட்டவீரர்.

● **கே.யே.டிஸான்** :- புதியவர். வலதுகை துடுப்பாட்டவீரர்.

● **ஆா.மயுரன்**- புதியவா் அணியின் நம்பிக்கைக்குரியவர். விக்கெற் காப்பாளர்.

● **எஸ்.யதூர்சன்** :- புதியவர். சகலதுறை ஆட்டக்காரர். வலதுகை ஆரம்பத்துடுப்பாட்ட வீரர். பிரியோசனமான பந்து பரிமாற்றத்துக்குரியவர்.

● **வி.ஜோல ஷேமன்** :- புதியவர். வலதுகை அதிரடி துடுப்பாட்ட வீரர். சிறந்த களத்தடுப்பாளர். வலதுகை சுழற்பந்துவீச்சாளர்.

● **வை.சுதர்ஸனன்** :- புதியவர். வலதுகை அதிரடிததுடுப்பாட்ட வீரர்.

● **எஸ்.சுதர்ஸன்** :- புதியவர். வலதுகை துடுப்பாட்ட வீரர்.

● **பி.செந்தூரன்** :- புதியவர். வலதுகை பந்து வீச்சாளர்.

## கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தால் கொடுப்பனவை இழந்த ஆசிரியர்கள்

கல்வியமைச்சு அண்மையில் வெளியிட்ட சுற்று நிருபத்தினால் ஆசிரியர்களுக்கு மாதாமாதம் கிடைத்து வந்த கொடுபபனவு இவ்வருடம் கிடைக்கவில்லை என பிரஸ்தாப ஆசிரியர்கள் குறைப்படுகின்றனர்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரை தமது அடிப்படைச சம்பளத்தில் 10 வீதம் அல்லது 15 வீதம் கஷ்டப்பிரதேசக் கொடுப்பனவாகப் பெற்று வந்தனர்.

இந்நிலையில் ஜனவரி மாதம் முதல் கஷ்டப் பிரதேசப்பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 2ஆயிரதது 500 ரூபாவும் வழங்கப்படும் என தற்போதைய கல்வி அமைச்சின செயலாளர் கலாநிதி தாரா டிமெல் அறிவித்திருந்தார்.

ஆனால் அந்த அறிவித்தல் படி மூன்று மாத காலமாகியும் ஒரு கொடுப்பனவு கூட வழங்கப்படவில்லை.

ஏறகனவே வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவும் டிசம்பருடன் நிறுத்தப்பட்டுள்ளது. புதிய கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் இருந்ததையும் இழநத நிலைக்குப் பிரஸ்தாப ஆசிாியர்கள் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (க-9)

## தெற்காசிய விளையாட்டு விழா அடுத்த மாதம் கொழும்பில்

தெற்காசிய நாடுகளின் 19 ஆவது விளையாட்டு விழாவை அடுத்த மாதம் கொழும்பில் நடாத்துவது என்ற தீர்மானத்திற்கு போட்டியில் பங்கேற்கும நாடுகளின் குழுக்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாக தேசிய ஒலிம்பிக்குழு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நடாத்தப்படவிருந்த இவ்விழா சுனாமி அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டிருநதது. எனினும், அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரை இவ் விளையாட்டு விழாவை கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் நடத்துவதென தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-7)

# கறுப்பு சாபக்கேடல்ல!

"அம்மா.. எந்தச் சாறியைக் கட்டவேணும்...?"

"உன்றுடைய மூன்றாம் எண்ணுக்குப் பொருத்தமான கத்தரிப்பூ நிறச் சாறியைத்தான் உடுபிள்ளை".

மலரைப் பெண் பார்க்கும் படலம் இன்றுதான் கால்கோள் விழாவாக ஆரம்பமாகின்றது. கனடாவில் சிற்றிஷன் மாப்பிள்ளையாம். கணனிப் பொறியியலாளர் வேறு. நிரந்தர விசாவும் பெற்றவராம். தாயுடன் மகனுமாகச் சேர்ந்து இன்று மலரைப் பெண் பார்க்க வருகிறார்கள். மலரின் வீடு தடபுடலாக ஒரே அமர்க்களப்பட்டுப்கொண்டிருந்தது.

காரும் வந்துவிட்டது. மணமகனும் தாயுமாக முன் ஹோலில்வந்து அமர்கின்றனர்.

மலரின் அப்பா பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வருகின்றார். மனைவி சந்திரா பரபரக்க ஓடி வருகின்றார்.

"என்னப்பா சுனாமி வந்துவிட்டதா? ஏன் இவ்வளவு அவசரமாக ஓடி வருகின்றாய்?"

"அப்பா கொஞ்சம் பேசாமல் இருங்கோ. ஒரு நல்ல இடத்துக் சம்பந்தம் வந்திருக்கு. மாப்பிள்ளையும் தாயும் வந்திருக்கினம் போய்க் கதையுங்கோ..."

"என்னப்பா விசர்க்கதை கதைக்கிறாய். முன்பின் அறியாத ஒருவனை என்னவென்று நம்புவது. தீர விசாரித்தனியா...?"

"ஓ... அதெல்லாம் விசாரிச்சாச்சு. 2 கிழமைக்குள் இந்தப் பையன் கனடாவுக்குப் போகப் போகின்றார். சதன பாதனம் ஒன்றும் தேவையில்லையாம். பெண்ணைப் பிடித்துக்கொண்டால் இந்தத் திருமணம் ஒப்பேறிய மாதிரித்தான்".

மலரின் அப்பா மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, மலர் வெளிக்கிடும் அறைக்குள் செல்கின்றார். மனைவ சந்திராவும் பின் தொடர்கின்றாள். ஹோலில் அமர்ந்திருக்கின்ற மாபபிள்ளைக்கும் தாயாருக்கும் இரண்டாவது மகள் கவிதா சிற்றுண்டி பரிமாறிக் கொண்டிருக்கிறாள்.


"பிள்ளை மலர், அப்பா சொல்லும் வரை அறையை விட்டு நீ வெளிவரக்கூடாது. என் மனதுக்கு திருப்தி என்று கண்டால் மட்டுமே பச்சைக் கொடி காட்டுவேன் அந்தரப்படாதைங்கோ".

"என்னபபா நாரதர் மாதிரி நிக்கிறியள்...?" மனைவி சந்திரா கோபப் பார்வையைக் கக்குகின்றான்.

"நாரதரது கலகம் எப்பொழுதும் நன்மையில்தான் முடியும். பொறுத்திருந்து பாருங்கோ.." என்று கூறிய அப்பா முன் ஹோலில் அமர்ந்திருக்கும் மாப்பிள்ளை மற்றும் தாயாரைச் சந்திக்கத் தயாராகின்றார்.

கடைசி மகள் இரட்டைத் தும்மலை வெளிப்படுத்த, 'பிள்ளையாரே! எல்லாம் நன்மையில் முடியவேண்டும்' என்று மனைவி பிரார்த்திக்க களத்தில் அப்பா இறங்குகின்றார்.

"அம்மா வணக்கம்!, தம்பிக்கும் சேர்த்துத்தான்" என்று கூறிய வண்ணம் மலரின் அப்பா கதிரையில் அமர்கின்றார். தாயும் பிள்ளையும் வாட்டசாட்டமான உருவங்கள். 'உலகில் பஞ்சம் ஏற்பட்டதற்கு இவர்கள் போன்றவர்கள்தான் காரணமோ என்னவோ...!'




"அம்மா நீங்கள் எந்த இடம்?"

"நாங்கள் புங்குடுதீவு. இந்த நாட்டில் ஏற்பட்ட போரினால் இங்கு வசிக்கமுடியாமல் 15 ஆண்டுகளுக்கு முன்னரே கனடாவுக்குச் சென்று அங்கு குடியேறி நிரந்தர விசாவும் பெற்றுவிட்டோம். எனது கணவர் அண்மையில் காலமாகிவிட்டார். எனக்கு நாலு ஆண்பிள்ளைகளும், மூன்று பெண்பிள்ளைகளும் இருக்கினம். இவர்தான் கடைக்குட்டி. கனடா பல்கலைக்கழகம் ஒன்றில் கணனிக் கல்வி கற்று பிரபல நிறுவனம் ஒன்றில் பொறியியலாளராக வேலை செய்கின்றார்.

கனடாவில் உள்ள தமிழ்ப பெண்பிள்ளைகளை தனக்குப் பிடிக்கவில்லையாம். தமிழ்க் கலாசாரம் கொண்ட எங்கள் கிராமத்து பெண் ஒருத்தியை திருமணம் செய்ய விரும்புகின்றார். உங்கள் மகள் ஒரு பட்டதாரி. கைநிறையச் சம்பாதிக்கிறா. நீங்களும் உங்கள் மனைவியும் உயர்ந்த உத்தியோகத்தில் இருக்கின்றீர்கள். ஒரு புரோக்கர் மூலம் உங்கள் மகளின் குறிப்பைப் பெற்று பொருத்தம் பார்த்து திருப்தி எனக்கண்ட பின்னரே உங்கள் மகளை நேரடியாகப் பெண் பார்க்க வந்திருக்கிறோம். பெண்ணைப் பிடித்துக் கொண்டால் மேற்கொண்டு திருமணப்பேச்சை ஆரம்பிக்கலாம் என்றுதான் வந்தோம்". இவ்விதம் மணமகனின் தாயார் கூறிமுடித்துவிட்டு நெற்றியில் இருந்து வடிந்த வியர்வையைத் தனது கைக் குட்டையால் துடைத்துக் கொள்கிறார்.

மலரின் அப்பா இப்பொழுது பேசத் தொடங்குகின்றார்.

"அம்மா மிக்க சந்தோஷம். எப்படிப்பட்ட பெண்ணை நீங்கள் விரும்புகிறீர்கள்...."

"நாங்கள் விரும்புகின்ற பெண் என்னதான் படித்திருந்தாலும், பணம்தான் இல்லாவிட்டாலும் கனடாவின் கால நிலைக்குப் பொருந்துமாறு வெள்ளைப்பிள்ளை, அதுவும் மெல்லிய பிள்ளையாக அழகாக இருக்கவேணும். அப்படி இருந்தால்தான் கலியாணத்துக்குச் சம்மதிப்போம்" என்றார் மாப்பிள்ளையின் தாயார்.

மலரின் அப்பா பொங்கி வருகின்ற கோபத்தை அடக்க' பொறுமையைக் கடைப்பிடித்து நிதானமான குரலில் பேசத் தொடங்கினார்.

"அம்மா நான் சொல்வதைக் கேட்டு தயவுசெய்து கோபப்படாதைங்கோ. இந்த மண்ணிலே போராட்டம் எழுந்த பொழுது நாங்கள் பட்டபாடு இறைவனுக்குத்தான் தெரியும். பஞ்சம், பிணி, பட்டினி, அகதி வாழ்க்கை குண்டுமழை, ஷெல்லடி போன்றவற்றிற்கு முகம்கொடுத்து வாழ்வா? அல்லது சாவா? என்ற ஜீவ மரணப்போராட்டத்தில் சிக்கித் தவித்ததை நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

நீங்கள் இப்பொழுது பெண்பார்க்க வந்திருக்கும் எனது மகள் உயிரைக் கையல பிடித்துக்கொண்டுதான சென்றிகளைக் கடந்து ரியூட்டறிக்கும் பல்கலைக்கழகத்துக்கும் சென்று படித்தாள்.

சமாதான ஒப்பந்தம் எழுதுவதற்கு முன்னால் ஒரு குமர்ப்பிள்ளை தனது தேவைக்காக வீட்டைவிட்டு வெளிக்கிட்டு மீண்டும் வீடு வந்து சேர்வதற்கிடையில் எங்கள் உயிர் எங்களிடம் இருக்காது. கடவுளே! எங்கள் பிள்ளை உயிருடன் திரும்பிவரவேண்டும் என்று நாங்கள் வேண்டாத தெய்வங்கள் இல்லை. இப்படியெல்லாம் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்ற போது,

தென்னாபிரிக்காவில் 'அபாதீட்' என்ற நிறவெறியை அதாவது வெள்ளை நிறம் உயர்ந்தது, கறுப்பு நிறம் தாழ்ந்தது என்ற பத்தாம் பசலிக் கொள்கையை இங்கு கொண்டுவந்து ஏனம்மா விதைக்கின்றீர்கள்?

உங்களிடம் என் மகளின் ஜாதகம் தந்த புறோக்கர் பெட்டை கறுப்புநிறம் என்று சொல்லவில்லையா? என் மகள் கறுப்புத்தான்.

ஆனால் எனக்கு அவள் விலைமதிக்கமுடியாத தங்கம். நிறத்தைக் காட்டி ஒரு பெண்ணைத் தள்ளிவைப்பது உங்களுக்கு நியாயம் எனக் கண்டால் தயவுசெய்து நடையைக் காட்டுங்கள்".

மலரின் அப்பாவின் வார்த்தைகள் மாப்பிள்ளையின் மனதில் நீக்கமற நிறைந்து சிந்தனைக் குதிரையைத் தட்டிவிட்டது.

மாப்பிள்ளையின் தாயார், "தம்பி பெண்பிள்ளை கறுப்பு என்டால் எங்களுக்குச் சரிவராது. நாங்கள் போவம் எழும்பு" என்றார்.

"அம்மா கொஞ்சம் பொறுங்கோ. அவசரப்படாதைங்கோ. கறுப்பு, சிவப்பு என்ற பேதத்தைக் கைவிட்டு பெண்ணை ஒருக்கால் பார்ப்பம்" என்று மாப்பிள்ளை ஆதங்கப்பட,

மலரின் அப்பா குறுக்கிட்டு,

"தம்பி, முதலில் நான் சொல்வதில் பிழை இருந்தால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

ஒரு பெண் பிள்ளையைப் பார்த்துவிட்டு அவளை வேண்டாம் என்று ஒதுக்கி விட்டால் அவளுக்கு ஏற்படுகின்ற உளத்தாக்கத்தைச் சீர்செய்ய எந்த வைத்தியனாலும் முடியாது.

நான் விதியை நம்புகின்றவன். விருப்பம் எண்டால் என் மகளைப் பார்த்து விட்டுச் செல்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

இன்னாருக்கு இன்னார் என்று தேவன் எழுதிவைத்தால் அது நிச்சயம் நடந்தேறும்" என்றார்.

மாப்பிள்ளையின் தாயார் மீண்டும் கதிரையில் அமர்ந்தார். சுனாமிப்புயல் வீசியது போல் அவளின் முகம் மாறியிருந்தது.

"பிள்ளை மலர், ஒருக்கால் வாம்மா இங்க".

மலர் தமிழ்ப் பெண்ணுக்குரிய பண்புடன் வந்து அப்பாவுக்கு அருகில் அமர்ந்தாள்.

அண்ணலும் நோக்க அவளும் நோக்கினாள். கண்களும் கண்களும் கவ்வின.

மாப்பிள்ளையின் தாயார் மலரின் முகத்தைப் பார்த்து 'கடவுளே! கறுப்பிலும் இப்படி ஒரு வடிவு இருக்கின்றதா? தப்புக்கணக்குப் போட்டு விட்டேனே.

இந்த இரண்டு கிழமைக்குள் என் மகனுக்கு எத்தனையோ பெண்களைப் பார்த்தேன். ஆனால் இப்படியொரு அழகான பெண்ணை நான் பார்த்ததே கிடையாது' என்று மனதினுள் வியந்தாள்.

"தம்பி எனக்குப் பெண்ணைப் பிடித்துவிட்டது. உன் விருப்பம் என்ன? வெளிப்படையாகச் சொல்லி விடு" என்றார்.

"அம்மா நான் தாய் சொல்லைத் தட்டாத பிள்ளை" என்றான் மகன்.

* * *


ஆனந்தி சிவராசா
வேலணை

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 4



### அத்தியாயம் II

அமர்வு நிறுத்தமொன்றின் முடிவில் ஒரு புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாவதுடன் அது ஜனாதிபதியால் சம்பிரதாயபூர்வமாகவும் திறந்துவைக்கப்படுகின்றது.

#### ஒத்திவைப்பு

அமர்வு நிறுத்தமொன்று ஜனாதிபதியால் செய்யப்படுகின்ற அதே வேளையில் ஓர் ஒத்திவைப்பு பாராளுமன்றத்தால் அல்லது நிலையியற் கட்டளைகளின் கீழ் செய்யப்படுகின்றது. ஒத்திவைப்பென்பது நிலையியற் கட்டளைகளால் குறித்துரைக்கப்பட்ட அடுத்த சாதாரண அமர்வு நாள் வரை ஓர் இடை ஓய்வுக் காலமென்ற கருத்தாகும். எனினும் பாராளுமன்றம், அறிவித்தலின் பின்னர் செய்யப்படும் ஒரு பிரேரணை மூலம் வேறொரு திட்டவட்டமான தேதிக்கு ஒத்திவைக்கப்படலாம். எனவே அடுத்த அமர்வுத் தேதிக்குப் புறம்பாகக் குறித்த ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டாலன்றி, அடுத்த தேதியைக் குறிப்பிட்டுக் கூற வேண்டியதில்லை.

சபை ஒரு வழமையான அமர்வு நாளில் 7(4) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் பி.ப 4.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும். எனினும் நிலையியற் கட்டளை 8 செயற்படுகின்ற ஒரு நாளில், சபையால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறொரு நேரத்தில் அது ஒத்திவைக்கப்படலாம் அல்லது அவ்வேளையில் கையிலுள்ள அலுவல் முடிக்கப்படும் வரை அத்தினத்தின் எந்நேரம் வரையும் தொடரப்படலாம்.

சபை கடும் ஒழுங்கற்ற நிலை காரணமாக, இடைநிறுத்தப்படுதல் போதாதென்று தோன்றுகையில் எந்நேரத்திலும் ஒத்திவைக்கப்படலாம்.

#### அதிவிசேட கூட்டம்

பிரதம அமைச்சரின் கோரிக்கையின் பேரில் சபை ஒத்திவைக்கப்பட்ட தேதிக்கு முந்திய ஒரு தேதியில் சபாநாயகரால் பாராளுமன்றம் விசேடமாகக் கூட்டப்படுவதற்கு நிலையியற் கட்டளை 14 ஏற்பாடுசெய்கின்றது. அத்தகைய கூட்டங்கள் பாரதூரமான தேசிய நெருக்கடிகளின் போது கூட்டப்படுகின்றன.

அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் சபாநாயகரின் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலும் நேரத்திலும் சபை கூட வேண்டும். அத்தகைய அதிவிசேட கூட்டங்கள் பற்றி உறுப்பினர்களுக்கு உரிய அறிவித்தல் கொடுக்கவேண்டியது சபாநாயகரின் கடமை.

#### இடை நிறுத்தம்

ஓர் இடைநிறுத்தமென்பது நாளின் போதான ஒரு தற்காலிக இடை ஓய்வுக்காலமாகும் .இடைநிறுத்தத்தின் போது சபையின் அமர்வு தொடர்கின்றதென்பதுடன் செங்கோலும் சபா மண்டபத்தில் விட்டு வைக்கப்படுகின்றது. சபையின் அமர்வு நிலையியற் கட்டளை 7.(3) இன் கீழ் வழமையாக மதிய உணவுக்காக இடைநிறுத்தப்படுகின்றது. நிலையியற் கட்டளையில் இதற்காகக் குறித்துரைக்கப்பட்டுள்ள நேரம் நண்பகல் 12 மணி எனினும் அநேக சந்தர்ப்பங்களில் நடைமுறைக் காரணங்களுக்காக சபை தீர்மானத்தில் மூலம் நண்பகல் 12 மணிக்குப் பின்னரும் அதன் அலுவலைத் தொடரத் தீர்மானித்துள்ளது. அலுவல் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்குக் குறித்துரைக்கப்பட்ட நேரம் பி.ப 1.30 மணி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பரிசீலனையின் போதும் அமர்வுகள் ஒத்த வகையில் இடைநிறுத்தப்படுகின்றன.

நிலையியற் கட்டளை 74 (2) இன் கீழ் உறுப்பினர் ஒருவரைப் பெயர் குறிப்பிடும் பொருட்டும் சபாநாயகர் சபையை இடைநிறுத்தி வைக்கலாம். சபாநாயகர் அவ்வாறு பணிக்கும்போது குறிப்பிட்ட உறுப்பினர் சபையை விட்டு வெளியேற மறுத்தால் ஒழுங்கை மீறிய உறுப்பினரைப் படைக்கலச் சேவிதர் சபையிலிருந்து அகற்றக் கூடியதாகச் சபாநாயகர் சபையைச் சில நிமிடங்களுக்கு இடைநிறுத்திவைக்கலாம். படுமோசமான ஒழுங்கற்ற நிலையிலும் அமர்வு சில நிமிடங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்படலாம்.

#### கூட்ட நடப்பெண்

அரசியலமைப்பின் 73ஆம் உறுப்புரையின்படி சபையின் கூட்ட நடப்பெண்.சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்களாக இருக்கவேண்டும். கூட்டநடப்பெண் இல்லையென்பது சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் வரை போதிய எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் சமுகமாயிருக்கின்றார்களெனக் கருதப்படும் கூட்டநடப்பெண் இல்லையென ஆட்சேபிக்கப்பட்டால் .கட்டடம் பு,ராவும் கேட்கப்படத்தக்கதாக ஐந்து நிமிடங்களுக்கு கூட்டஅழைப்பு மணி அடிக்கப்படும் ஐந்து நிமிடங்களின் முடிவில் போதிய கூட்ட நடப்பெண் இல்லாதிருப்பின் சபாநாயகர் வினாவின்றிச் சபையை ஒத்திவைக்க வேண்டும். அதன்பிரகாரம் சபை அடுத்த அமர்வு நாள் வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கும் . கூட்டநடப்பெண் இல்லாமையால் அமர்வை இடைநிறுத்துவதற்கு ஏற்பாடெதுவும் இல்லை.

முழுப் பாராளுமன்றக் குழுவிற்குரிய கூட்டநடப்பெண்ணும் இருபதாகும். முழுப் பாராளுமன்றக் குழுவில் கூட்டநடப்பெண் இல்லையென்ற பிரச்சினை எழுப்பப்பட்டால் சபாநாயகர் கூட்ட அழைப்பு மணியை அடிக்கும் படி கட்டளையிட வேண்டும். போதிய எண்ணிக்கையிலான உறுப்பினர்களை அழைக்க முடியாதவிடத்து சபாநாயகர் சபையை மீண்டும் கூட்டி உறுப்பினர்களைத் திரும்ப எண்ணவேண்டும் . அப்போதும் போதிய எண்ணிக்கை இல்லாவிட்டால் சபாநாயகர் வினாவின்றிச் சபையை ஒத்திவைக்கவேண்டும். போதிய எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருந்தால் சபை மீண்டும் குழு நிலைக்கு மாறுவதெனத் தீர்மானிக்க வேண்டும்.

கூட்டநடப்பெண் பற்றிய பிரச்சினையைக் குறிப்பாக மதியவேளையில் எழுப்புவதில்லையென அனைத்துக் கட்சிகளும் உடன்பட்டுக்கொண்ட சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறிருப்பினும் கூட்டநடப்பெண் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டால் வழமையான நடைமுறை பின்பற்றப்படவேண்டும். சபையின் கூட்ட நடப்பெண் தொடர்பான ஏற்பாடுகளைப் 10ஆம் 11ஆம் இலக்க நிலையியற் கட்டளைகள் கொண்டுள்ளன.

### அத்தியாயம் III

### பாராளுமன்றத்தில் அலுவல்களை நடத்துதல்

#### நேரத்தைக் கட்டுப்படுத்துதல்

பாராளுமன்றப் பஞ்சாங்கமும் அமர்வு நேரங்களும் நிலையியற் கட்டளைகளால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. எனினும் கூட்ட நாட்களையும் நேரங்களையும் குறித்துரைக்கின்ற நிலையியற் கட்டளைகள் பெருமளவுக்கு இசைந்து கொடுக்க கூடியன என்பதனால் ஒன்றில் "அமர்வல்லாத" ஒரு நாளில் பாராளுமன்றம் கூடி வழமையான நேரங்களுக்கு அப்பால் அலுவல்களை நடத்துவதை இன்றேல் உரிய தேதியில் கூடாதிருப்பதைப் பொதுவில் காணக்கூடுமாயிருக்கும். அத்தகைய வேறுபாடுகள் சபையின் அனுமதியுடன் மட்டும் அனுமதிக்கப்படுகின்றன. அவற்றுக்கு மிக அரிதாகவே எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

நிலையியற் கட்டளைகளின் கீழ் சபை ஆண்டு பு,ராவும் கூட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி மாதந்தோறும் ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது ஞாயிற்றுக்கிழமையை அடுத்துவரும் வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக இரு வாரங்களிலும் பாராளுமன்றம் கூட வேண்டுமென்றும் அத்தகைய முதலாவது மூன்றாவது வாரங்களில் செவ்வாய்,புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் அது கூட வேண்டுமென நிலையியற் கட்டளை 7 ஏற்பாடு செய்கின்றது. சபை கூட வேண்டு மென எதிர்பார்க்கப்படும் நாட்களை முனைப்படுத்திக் காட்டுகின்ற நாட்காட்டியொன்று ஒவ்வோராண்டின் தொடக்கத்திலும் சபை முதல்வரின் அலுவலகத்தினால் வழங்கப்படுகின்றது. (தொடரும்)

# ஸ்ரீலங்கா எயார்லைன்சுக்கு சுனாமி அனர்த்தத்தால் நட்டம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை மற்றும் எரிபொருள் விலை உயர்வால் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்படக் கூடும் என்று அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிறுவன அதிகாரி சந்தான டி சில்வா இது குறித்து தெரிவிக்கையில்,

ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கிற்கான வாராந்த விமான சேவையை தமது நிறுவனம் அதிகரிக்க உள்ளதாகவும், இம்மாத இறுதியில் நியூயோர்க்கிற்கான நாளாந்த சேவையை தொடங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேபோல் பாங்கொக் வழியாக பீஜிங் நகருக்கான வாரத்தில் மூன்று நாட்கள் விமான சேவையும் விரைவில் தொடங்கப்படவுள்ளது. ஆழிப்பேரலைக்கு முன்பாக 2 எயார்பஸ் மற்றும் ஏ-320 விமானம் ஆகியவற்றை குத்தகைக்கு எடுப்பது தொடர்பான முடிவு கைவிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஆயிரத்து 500 தொன் அளவிலான ஆழிப்பேரலை நிவாரணப் பொருட்களை எயார்லைன்ஸ் நிறுவனம் சரக்குக் கட்டணமின்றி எடுத்துச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா விமான நிறுவனமானது 60 வீத பங்கு ஸ்ரீலங்கா அரசாலும் 40 வீத பங்கானது துபாயை மையமாகக் கொண்ட எமிரேட்ஸ் எயார்லைன்ஸாலும் நிர்வகிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ப)

# அனுமதியின்றி நிறுவப்பட்ட விளம்பர பலகைகளை அகற்ற நடவடிக்கை

(கொழும்பு)

நெடுஞ்சாலைகளில் அனுமதியின்றி நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் அல்லது பெயர்ப் பலகைகளை உடனடியாக அகற்றுமாறு அதன் உரிமையாளர்களை நெடுஞ்சாலைகள் அமைச்சு கேட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளில் பல இடங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறாமல் விளம்பரப் பலகைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளமை அதிகாரசபை அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பல இடங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள கால எல்லை முடிவடைந்த பின்னரும் விளம்பரப் பலகைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் அகற்றப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, அனுமதி பெறாமல் நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் அல்லது பெயர்ப் பலகைகளை உடனடியாக அகற்றி விடுமாறும் அல்லது அவ்வப் பிரதேசத்திற்குரிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவற்றின் உரிமையாளர்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறு நெடுஞ்சாலைகளில் அனுமதியின்றி நிறுவப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளையும் மற்றும் பெயர்ப் பலகைகளையும் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை எச்சரித்துள்ளது. (க)

# 12 மின்பிறப்பாக்கிகள் திருட்டு குற்றவாளிகளுக்கு பிணைமறுப்பு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட 12 மின்பிறப்பாக்கிகள் காணாமல் போனமை தொடர்பாக கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களுக்கும் பிணை அனுமதி மறுக்கப்பட்டதுடன், அவர்களது விளக்கமறியல் தண்டனை நீக்கப்பட்டுள்ளது.

மேற்படி மின்பிறப்பாக்கிகள் காணாமல் போனமை தொடர்பாக மாவட்ட உதவிக் காணி ஆணையாளர் திஸாநாயக்க மற்றும் மாவட்ட செயலக ஊழியர்களான உபாலி ரட்ணசிறி, உப்புள்குமார, கொடிப்புலி ஆகியோரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணை கடந்த 8 ஆம் திகதி மீண்டும் திருகோணமலை நீதிமன்றில் நடைபெற்றபோது நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா சந்தேக நபர்களை எதிர்வரும் 18 ஆம்திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

(க)

**அன்பு வாசகர்களே!**

**எதிர்வரும் 14.03.2005இல் இருந்து விவாத அரங்கு மீண்டும் பிரசுரமாகவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**

## விவாத அரங்கு - 7

**விடயம்**


**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீரபடுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# மகான்களின் போதனைகள் தெளிவான வாழ்வுக்கு வழியே தவிர ஒருபோதும் முக்தி ஆகாது

ஸ்ரீ கல்கி பகவான் கூறுகிறார். உலகில் பல மகான்கள்,



ரிஷிகள் வாழ்ந்தார்கள், வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்கள இறைவனைக் கண்டவர்கள். முக்தியை தழுவிக் கொண்டவர்கள். இவர்கள் பல போதனைகளையும், சாதனைகளையும் அள்ளி வழங்கியிருக்கின்றார்கள். அவற்றை கற்பதனாலோ, பின்பற்றுவதனாலோ ஒருவன் முக்தி அடைந்துவிட முடியாது. வாழ்க்கைக்கு ஒரு பிடிப்பைத் தான் அது ஏற்படுத்த உதவும்.

ரமணமஹரிஷி, ராமகிருஷ்ணர், புத்தர் இவர்கள் பல போதனைகளையும் சாதனைகளையும் செய்தவர்கள். இவர்களுக்கு பல சீடர்கள் இருந்தார்கள். அவர் வழி நடந்த இச்சீடர்களே அந்த மகான்கள் போல் முக்தி அடையவில்லை. எனவே இவர்களின் போதனைகள் வேண்டுமானால் மனதளவில் மாற்றங்களை ஏற்படுத்த உதவிபுரிந்திருக்கும். அவ்வளவுதான் இது எவ்வாறு அமையும் என்றால் ஒரு அறையில் பல பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது. அவற்றை அவ்வறைக்குள் வேறு விதமாக அடுக்கி அழகு பார்க்கப்பட்டாலும அந்த அறையில் தான் அப பொருட்கள் அனைத்தும் இருக்கும். ஆனால் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்கும். இது ஒரு சந்தோஷம். இது போன்றே ஒரு சந்தோஷத்தைப்பெற அல்லது

## வெள்ளி நற்சிந்தனை

சில பிரசசினைகளிலிருந்து மீள, ஆழமான அமைதியான நிலைக்கு அழைத்துச் செலலவே போதனைகள் உதவிபுரியும். இவை முக்தி ஆகாது.

முக்தி என்பது முழுமையாக மனதிலிருந்து விடுதலை அடைதல். இதனை எந்தப் போதனையோ, சாதனையோ கொடுக்க முடியாது. இது ஒரு மன இயல் வழியோ, தத்துவ வழியோ அல்லது தியான வழியோ அல்ல. இது ஒரு நரம்பியலும் உடற் கூறும் சம்பநதப்பட்ட விஷயம். எனவே யாருடைய போதனையையும் பின்பற்றாதீர்கள் என பகவர்ன் கூறுகின்றார். அவ்வாறு பின்பற்றினால் நீங்கள் இரண்டாம் தரமான மனிதனாகிவிடுவீர்கள்.

இயேசு கிறிஸ்துவினால் மனிதகுலம் அனைத்தின் மீதும் அனபு செலுத்த முடிந்தது. உங்களால் அவ்வாறு அன்பு செலுத்த முடியுமா? ஆனால் அவரால் முடிந்தது. ஏனெனில் அவரது மூளை வேறுவிதமாக அமைந்திருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணர் ஆனந்தத்தின் உச்ச நிலையில குதித்தார் நடனமாடினார். உங்கள் குண்டலினிசக்தி விழித்தெழுந்தாலொழிய உங்களால் அவ்வாறு செய்யமுடியாது. எனவே ரமணரது, புத்தரது புத்தகங்களையெல்லாம் படிக்கலாம். அவர்கள் சொல்லுவதை யெல்லாம் செய்யலாம். ஆனால் ஒரு சிறிதளவு கூட நகரமுடியாது. தெளிவு வேண்டுமானால் கிடைக்கலாம். நீங்கள் நல்ல உணர்வுடன் இருக்கலாம். இவை அனைத்தும் முக்தியாகாது.

பகவான் கூறுகின்றார் 'நீங்கள் எவ்வாறாக உள்ளீர்களோ அவ்வாறோ ஏற்றுக்கொள்ளுங்கள்' நீங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டால் போராட்டமேயில்லை. உங்களுக்கு பிராணசக்தி மிகுதியாகும். அதனால் உங்களுக்குள் என்ன நடக்கிறது என்று பார்க்க முடியும். பாருங்கள் அவ்வாறு பார்த்தால் ஆனந்தமே கிட்டும். அதாவது மனதில், உடலில் ஏற்படும் வலியை முழுமையாக அனுபவிக்க முடியும். அந்த வலியே ஆனந்தமாக மாறி விடும்.

ஆனந்தம் நிரந்தரமாக அமைய வேணடும். தற்காலிகமாக அமையக்கூடாது. உலகிலே பலர் தற்காலிக ஆனந்தத்தையே அனுபவிக்க விரும்புகின்றார்கள். அதாவது மனதில் வலி தோன்றும் போது அதனை அனுபவிக்காது அடியிலே தள்ளிவிடு கின்றார்கள். துயரங்களை எதிர்கொள்வதில்லை. துயரம் ஏற்பட்டதும் தொலைக்காட்சி பார்ப்பதன் மூலமோ, சினிமா, சினேகிதர் வீடுசென்றோ தப்பித்துக் கொள்கின்றார்கள். இதைத் தான் 'துயரத்தை சமாளித்தல்' என்கிறோம். இது விடுதலையல்ல. ஆகவே துயரம் ஏற்படும் போது அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

நீங்கள் நீங்களாகவே இருங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் மூடி மறைக்கப்பட்ட குப்பைத் தொட்டி. உங்களை நீங்களே உள்ளே தோண்டிப் பாருங்கள் வெளியே தெரியும் குப்பை கூளங்கள். சவால்களை எதிர்கொள்ளுங்கள் அதைவிட்டு ஓடமுடியுமா? அது உங்களுக்கு துன்பத்தைக் கொடுக்கும். அத்துன்பத்தை அப்படியே அனுபவியுங்கள். திடீரென ஆனந்தத்தை உணர்வீர்கள். அப்போது சந்தோஷமான மனிதனாக மாறிவிடுவீர்கள். ஒரு சந்தோஷமான மனிதனால் துன்

**திருமதி கலா சுந்தரேசன்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

பத்தை மற்றவருக்கு ஏற்படுத்த முடியாது. தவறுகள் இடம்பெறாது. இந்த ஆனந்தம் குடும்பத்திற்கும், குடும்பத்திற்கு வெளியிலும் கொடுக்கப்படும். அவ்வாறான ஆனந்தமே முக்திக்கு வழி. எனவே போதனைகள் தெளிவான வாழ்க்கைக்கு வழிகாட்டியே தவிர முக்திக்கு வழியல்ல என்பதனை ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே பகவானின் பதில்கள். □

## முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வருடம் தோறும் நடாத்தப்படும் இந்து நாகரிகம் மற்றும இந்து சமயப் பாட முன்னோடிப் பரீட்சை எதிர் வரும் 14,15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த பாடசாலைகளுககு இணைப் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவை கிடைக்காத பாடசாலை அதிபர்கள் பரீட்சை செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை செயலாளர் அறிவித்துள்ளார். (க)

## ஸ்ரீராம கிருஷ்ணரின் 170 ஆவது ஜன்மதினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராமகிருஷ்ணரின் 170 ஆவது ஜன்மதின நிகழ்வு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நாளை சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன், இன்று வெள்ளிக் கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா தலைமையில் தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 40 படங்கள் கொண்ட கண்காட்சி, வில்லுப்பாட்டு, புத்தக கண்காட்சி, புத்தக விற்பனை என்பன இடம்பெறவுள்ளன. (க)

## நிவாரண உதவிகள் கிடைக்கவில்லை

குடத்தனை மணற்காடு மக்கள் தமது சொந்த இடங்களிலேயே குடிசைகளை அமைத்துத் தந்தால் தம்மால் தொழிலை மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சுனாமி நிவாரண முததிரை சிலருக்குக் கிடைக்கவில்லை எனவும் சுனாமி அனர்த்தத்தில உதவு தொகை 5 ஆயிரம் ரூபாவும் பலருக்கு கிடைக்கவில்லை என்றும் குறை தெரிவித்துள்ளனர். (க-51)

## 4 கோரிக்கைகளை முன்வைத்து

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்

(யர்ழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றுமுன்தினம் அடை





யாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பெப்ரவரி மாதம் பேரவைக்கு சமர்ப்பித்த அறிக்கை மற்றும் அது தொடர்பான தீர்மானம் குறித்த தமது கோரிக்கைகளை ஏற்க மறுத்ததைக் கண்டித்தே இவ் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

விசாரணை அறிக்கையின் முழுமையான பிரதி சங்கத்தின் பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும், 26.02.2005 எடுக்கப் பட்ட பேரவைத் தீர்மானத்தின் பிரதி சங்கத்துக்கு வழங்கப்பட வேண்டும், இரு தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண சமூகப் பிரதிநிதிகள் முன்னிலையில் தீர்மானத்தின் நியாயப்பாடடை துணைவேந்தர் விளகக வேண்டும் மற்றும் மேற்படி மூன்று கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் வரை மேற்கொண்டு இவ்விடயத்தில் நடவடிக்கை எடுப்பதை ஒத்திவைக்க வேண்டும் ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்த யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ஊழியர் சங்கத்தினர் தெரிவித்தனர். (ந-19)

## க.கா.குழுவின்

# உப அலுவலகம் வெலிகந்தையில்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் வெலிகந்தைப் பிரதேசத்திலும் இலங்கை போா நிறுத்த கண்காணிப்புக குழுவின் உப அலுவலகம ஒன்று திறக்கப்படவிருக்கின்றது.

மன்னம்பிட்டியில் இந்த அலுவலகம் நேற்று திறக்கப்படவிருந்த போதிலும் கட்டட உாிமையாளர் இறுதி நேரத்தில் அதனை வழங்க மறுத்து விட்டதால் தாமதங்கள ஏற்பட்டுளளதாகத் தெரியவருகின்றது.

போர் நிறுத்த கண்காணிப்புக குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தின் உப அலுவலகமாக செயற்படவிருக்கும் இவ் அலுவலகத்திற்கு பிரதி திங்கட் கிழமை தோறும் கண்காணிப்பாளர் விஜயம் செய்வார்.

வெலிகந்தை பிரதேசத்தில் இடம்பெற்று வரும் அசம்பாவித சம்பவங்களையடுத்தே இந்த அலுவலகம் திறக்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

## 2004 ஆம் ஆண்டிற்கான சம்பந்தர் விருது

# பேராசிரியர் மௌனகுருவின் நூலுக்கு

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டிற்கான சம்பந்தர் விருதுக்கு படைப்பாளி பேராசிரியர் சி.மௌனகுருவின் 'அரங்கியல்' என்ற ஆய்வு நூல் விருதுக்கும் பரிசுக்குமுரியதாகத் தெரிவாகியுள்ளது.

இலக்கியக் கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக ஈழத்தின் முன்னோடிச் சிறுகதைப் படைப்பாளி சம்பந்தர் பெயரால் வருடாவருடம் இவ் விருது வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், எழுத்தாளர் தெளிவத்தை யோசெப, பேராசிரியர் எஸ்.பத்மநாதன, மூத்த எழுத்தாளர் சு.வே. ஆகியோர் வழங்கிக் கௌரவிககப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு இவ்விருதினை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு பெறுகிறார்.

மட்டக்களப்பு தமிழுக்குத் தந்த பல்துறை அறிஞர் மௌன குருவாவார். ஆரம்ப வயதிலிருந்தே கலைநிகழ்ச்சிகளிலும் நாடகத் துறையிலும் மிகுந்த நாட்டம் கொண்டு விளங்கிய அவரைப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் படம் போட்டு அரங்கியலுக்கு வழிகாட்டிகளில் ஒருவராகத் தந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகக் காலத்தில் கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலி வதை ஆகியவற்றில் நடித்துத் தன்னைச் சிறந்த நடிகனாக அடையாளம் காட்டிக்கொண்டார். சடங்கிலிருந்து நாடகம் வரை தப்பி வந்த தாடி ஆடு, மௌன குருவின் மூன்று நாடகங்கள், பழையதும் புதியதும், சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும், சங்காரம், ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, நடிப்பு முறைகள் பற்றிய எண்ணக்கருக்கள், கலை இலக்கியக் கட்டுரைகள், மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் முதலான பல நூல்களின் ஆசிரியர். நவீன அரங்கியலில் மிக்க பரிச்சயமுடையவர்.

ஈழத்தில் மைல் கல்லாகக் கூடிய பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். 16ற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டி இவ்வாண்டிற்கான சம்பந்தர் விருது இவரின் அரங்கியல் என்ற நூலிற்கு வழங்கப்படுகின்றது.

எழுத்தாளர் சம்பந்தனின் மகள திரிவேணி கஜன் அவ் விருதுக்கான பணப்பரிசில் ரூபா 10,000ஐ வழங்கிவருகிறார். இம் மாதம 20 ஆம் திகதி நடை பெறவிருக்கும் விழாவில் இப் பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படவிருக்கின்றன. (ப)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 43

## தீர்த்தாடனம்



புண்ணிய நதியில் முழுகும் ஒரு பெரு வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. முற்பிறப்பில் செய்த புண்ணிய சீலர்க்கே கிடைக்கும்.

ஸ்ரீராமரைக் கைகேயி வனம் போகச் சொன்னாள் என்று பலர் கூறுவர். அது பிழை. "காட்டிலே சென்று கனிகொண்டுவா என்னுமாப்போல் "வனம் போய் புண்ணிய நதிகளில் முழுகிவா" என்று கூறினாள. அடியில் வரும் கம்பநாடர் கவியமுதைக காண்க.

"பு,ழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
ஏழிரண் டாண்டில் வா"

அன்றியும் புண்ணிய நதிகளைச் சிவனருளாகப் பாவித்து பக்தியுடன் முழுகுதல் வேண்டும்.

மாணிக்க வாசக சுவாமிகள் நீராடுகின்ற மடுவைப் பார்த்தார். அம் மடு அவருக்குச் சிவமும் உமையுமாகக் காட்சி தருகின்றது.

"எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடு" என்கின்றார்.

"சென்றாடு தீர்த்தங்கள் ஆனான்" என்கிறார் அப்ப மூர்த்திகள்.

"ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்ற திருவெம்பாவையையும் கண்டு சிந்திக்க.

நதியைச் சிவமாகவும், நதியின் தட்பத்தைச் சக்தியாகவும் பாவித்து முழுகுதல் வேண்டும். அதனால் பாவங்கள் கெடும்.

கங்கையில் ஸ்ரீராமர் முழுகினார். உலகிலுள்ள மக்கள் கங்கையில் முழுகித் தத்தம் பாவங்களைக் கழித்தார்கள். ராமர் முழுகியவுடன் கங்கையினுடைய பாவங்கள் நீங்கிவிட்டன.

கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர்
என்னில் நீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னில் நீக்கினென் உய்ந்தனென்யானென்றாள்

ஆதலால் தலயாத்திரை மக்கட்குப் பெரும் பயனைத் தருகின்றது.

பரம ஞான மூர்த்திகளாக விளங்கிய மாணிக்கவாசக சுவாமிகள், சிவஞானப் பாலுண்ட திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி நாயனார், அருணகிரிநாதர் முதலிய சுவாமிகளும் திருத்தல யாத்திரை புரிந்தார்கள்.

அண்மையில் வாழ்ந்த உண்மை ஞானியாம் பாம்பன் சுவாமிகளும் அடிக்கடி புண்ணியத் தலயாத்திரை புரிந்தார்கள். திருவருள் பெற்ற சிவஞானிகளே யாத்திரை புரிந்தாரெனில், திருவருள் பெற விரும்பும் நாம் யாத்திரை புரிவது எத்துணை அவசியம் என உணர்க.

நெடுங்காலமாகவே இமாலயத்தில் கேதாரம், பத்ரிநாதம் முதலிய தலங்களைத் தரிசிக்க வேண்டுமென்றும், அளகாநந்தி, மந்தாகினி முதலிய தீர்த்தங்களில் முழுக வேண்டும் என்றும் எண்ணிக்கொண்டிருந்தேன்.

23.7.61 சங்கரன் கோவிலுக்கு விரிவுரை புரியச் சென்றிருந்தேன். அங்கு என் நண்பர் திரு.அ.வே.ராமசங்கர சுப்பையா முதலியார் அவர்களைச் சந்தித்தேன். அவர் "கேதார யாத்திரைக்கு நாம் போவோம்" என்று கூறினார். நான் அதற்கு இசைந்து 60,70 சொற்பொழிவுகளை மறுத்துவிட்டு சென்னை பாரத் ட்ராவல் சர்வீஸ் மூலம் வட்டச் சுற்றுப்பயண டிக்கட்டை ஒழுங்குசெய்து கொண்டோம். இமாலய யாத்திரைக்கு உரியகாலம் ஆடி, ஆவணி, புரட்டாதி என்ற மூன்று மாதங்களேயாகும்.

வடக்கே வெய்யில் என்றால் பொறுக்க முடியாத அளவு கொளுத்தும். பனி என்றால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு வருத்தும். 17.8.61 சென்னை விட்டு இமாலயத்தை நோக்கி ரயிலில் புறப்பட்டேன்.

வெளியில் புறப்படும்பொழுது அடியிற்கண்ட கந்தரந்தாதிப் பாடலைச் சொல்லிவிட்டுப் புறப்படுவது எனது நீண்ட நாளைய வழக்கம். அதனால் நவகோள்களால் வரும் தீமைகள் அணுகமாட்டா.

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்த என்னில்
சேயவன் புந்தி பனிப்பாளு வெள்ளி பொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற் வேதரும் சேதமின்றே.

வழியில் பண்டரீபுரம் தரிசித்துக்கொண்டு 20.8.61 பம்பாய் சென்று தமிழ்ச் சங்கத்தில் தங்கினேன்.

பஞ்சவடி, த்ரியம்பகம், அகமதாபாத் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு 26.8.61 கோமதி நதி மேற்கடலுடன் கூடும் திருத்தலமாகிய துவாரகையை அடைந்தோம்.

துவாரகையில் கிருஷ்ண மூர்த்தியை வணங்கிவிட்டு பேட்டி துவாரகையைச்சென்று தரிசித்தோம்.

29.8.61 சோமநாதம் சென்று வழிபாடு செய்தோம். சோமநாதம் பன்னிரண்டு ஜோதிலிங்கத்தில் ஒன்று. அதன் அருகில் பிரபாச பட்டினம் அழிந்து கிடக்கின்றது. யதுகுலத்தார்கள் 5 லட்சம் பேர் மது மயக்கத்தால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மாண்ட இடம் அது.

இங்கே இரண்யா, சரஸ்வதி, கபிலம் என்ற மூன்று நதிகள் மேற்குக் கடலில் கூடுகின்றன. இரண்யா என்ற நதிக்கரையில் குரா மரத்தின் கீழ் இருந்து கண்ணபிரான் முக்தி அடைந்தார். அந்த இடத்தில் நான் முருகப் பெருமானை வைத்து வழிபாடு செய்தேன்.

## சரஸ்வதி நதி

வடக்கே யாத்திரை செய்கிறவர்கள் பெரும்பாலோர் சரஸ்வதி நதியை அறியார்கள். ..ங்கள் அதற்கென்று தனிவழி வகுத்துக்கொண்டு நித்பூர் சென்று சரஸ்வதி நதியில் மூழ்கி பெருமகிழ்ச்சி அடைந்தோம். சரஸ்வதி ராகம் பாடிக்கொண்டே முழுகினேன். அருணகிரிநாதன் சரஸ்வதி நதிக் கரையிலுள்ள முருகப் பெருமானைப் பாடியிருக்கிறார்.

"வளமுறு தடத்தினோடு சரஸ்வதி நதிக்கண்வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமாளே"

(அருவரை திருப்புகழ்)

1-9-61 உதயபூர் சென்று உதயசிங் என்ற மன்னருடைய அரண்மனை, ஆலயங்கள் முதலியவைகளைப் பார்த்து மகிழ்ந்தோம். புகைவண்டி உதயபூருடன் முடிவடைகின்றது.

(தொடரும்)

## இலவச வகுப்பு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மிருதங்கம் மற்றும் வயலின் வகுப்புக்கள் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இலவசமாக இம் மாத இறுதி வாரத்தில் நடாத்தப்படவுள்ளது.

சின்னையா துரைராசா மிருதங்க வகுப்பினையும் கிருஷ்ணசாமி பத்மநாதன் வயலின் வகுப்பினையும் நடாத்தவுள்ளனர்.இவ் வகுப்புக்களில் பங்குபற்ற விரும்புவோர் தமது விபரங்களை நாவலர் மணிமண்டபத்தில் சென்று பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

முதலில் வயலின் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதையடுத்து, மிருதங்க வகுப்பினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ற-19)

## பல்கலை அனுமதிகளுக்காக வேறுபரீட்சைகள் ஏதுமில்லை

### பல்கலை மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

பல்கலைக்கழக அனுமதிக்காக எதிர்வரும் காலங்களில் வேறு பரீடசைகளை நடாத்த கல்வி அமைச்சு உத்தேசிக்கவில்லையென பல்கலைக்கழக மானியஙகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

க.பொ.த.(உ/த)ப் பரீடசைக்கு அப்பால் வேறு பரீட்சை நடாத்த விருப்பதாக வெளியாகும் தகவல்கள் வதந்தியாகும்.

இந்த வதந்திகள பொதுமக்களையும் மாணவர்களையும் திசை திருபபும் நோக்கும் கொணடவையாகும் என்று மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெனடிஸ் தெரிவித்தார்.

இவ்வாறான வதந்திகள் அரசியல் ஆதாயம் தேடும் நடவடிக்கையாகும் எனவும் அவர் மேலும தெரிவித்தார். (ப-8)

## கியூமெடிக்கா குழுவினர் மந்திகையில் சிகிச்சை

(மருதங்கேணி)

சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய சேவையை வழங்குவதற்கென ஜேர்மன் கியு,மெடிக்காவைச் சேர்ந்த வைத்தியக் குழுவொன்று நேறறு முன்தினம் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு வருகைதந்து அங்கு வெளிநோயாளர் பிரிவில் சேவையாற்றினர்.

இவ மருத்துவக் குழுவில் 9 பேர் கொண்ட வைத்திய நிபுணர் மறறும் பொது வைத்தியத்துறை டாக்டர்கள் அடங்குவர்.

இவர்கள மேற்கொண்ட பொது வைத்தியதுறையில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 65பேருக்கு வைத்தியம் அளிக்கப்பட்டது.

இவ் நிறுவததை சேர்ந்த இன்னுமொரு குழுவினரால் வடமராட்சி புனர்வாழ்வு செயலணியின் ஒழுங்குபடுததலின கீழ் கற்கோவளம் கிராமத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மககளுக்கு உடல் உள சம்பந்தமான சிகிச்சை அளிக்கப்பட்டது. (ப-35)

## அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை மற்றும் பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ கலவன் பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளது.


இதற்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, வகுப்பு2.1, வகுப்பு 2.11 ஐச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதேவேளை, வலிகாம வலயத்திற்கு உட்பட்ட மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலையில் அதிபர் பதவி வெற்றிடமாகின்றது. இதற்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, வகுப்பு2.1, வகுப்பு 2.11 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1,வகுப்பு 2.11 (பயிற்றப்பட்ட பட்டதாரி) ஐச் சேந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணபபங்களை 21.03.2005ம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

(ப)

## "உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கிறார்"



இன்று முதல்வாசகம் குறிப்பிடுவது போல்புண்ணிய வாழ்க்கை நடத்தி நேர்மையானவற்றையே பேசி வந்த ஒரு மனிதரைப் பற்றி அவருது பகைவர்கள் கூறியது என்ன? "நீதி மானை நாம மடக்கப் பார்ப்போம்" (சா.ஞா.2:12) என்ற கூறி அவரைக் சொல்லத் திட்டம் வகுத்தார்கள். கடவுளின் பெயரால்

### தவக்காலச் சிந்தனை

உண்மை வழியல் மனிதனை கொண்டு சென்று அவர்களை வாழ்விக்க வந்த இயேசுவுக்கு நேர்ந்தது என்ன? "யுதர்கள் அவரைக் கொல்ல வழிதேடிக் கொண் டிருந்தார்கள்" (யோவா 7:1).

ஏழைகளுக்காக பரிந்து பேசி தென்அமெரிக்க ஆயர் ஆஸ்கார் ரொமேரோவை கோயில் பலிப்பீடத்தில் வைத்து சுட்டுக்கொன்றார்கள் இனப்பாகுபாடின்றி சம உரிமைக்காக போராடி மார்ட்டின்லூதரை துப்பாக்கிக்கு இரையாக்கினார்கள் உண்மைக்காகவும் நீதிக் காககும் மனித அப்படிடை உரிமைகளுக்காவும் போராடியதால் இரத்தம் சிந்திய கிறிஸ்துவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இருந்திருக்கிறார்கள். நாமும் அவர்களில் ஒருவராகலாமேயூ இது சவால். இதை ஏற்றால் சரித்திரம்.

காவலன்

# இன்று ஒரு தகவல்

## இல்லாத ஒன்று

இருட்டுநேரம் ஒருவன் ஓடிப்போய் விளக்கைக் கொழுத்திக் கொண்டு வந்தான். "என்ன செய்கிறாய்?" என்று கேட்டான் ஒருவன். "இருட்டை விரட்டிககொண்டிருக்கிறேன்" என்றான் இவன். "இலலாத ஒன்றை எப்படி விரட்டமுடியும?" என்று கேட்டார் முதலாமவர். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சொல்கிறீர்கள்? இருட்டு என்பது இல்லாத ஒன்றா?'' என்று கேட்டார்.

இப்போது அவர் விளக்கம் கொடுத்தார். இருட்டு என்ற ஒன்று தனியாக இல்லை. வெளிச்சம் இல்லாத நிலை தான் அது. ஒரு இடத்தில் வெளிச்சமாக இருந்தால் வெளிச்சமாக இருக்கிறது என்கிறோம். அந்த இடத்தில் வெளிச்சம் இல்லாவிட்டால் இருட்டு என்கிறோம். ஆக அந்த இடத்தில் இருப்பதும் இல்லாமல் போவதும வெளிச்சம் தான். இருட்டு என ஒன்று தனியாக ஓடிவந்து உட்கார்ந்து கொள்வதில்லை. நாம் தான் விளையாட்டுத்தனமாக நினைக்கின்றோம்.இருட்டு என்ற ஒன்று ஏற்கனவே இருப்பதாகவும் வெளிச்சத்தைக் கண்டவுடன் அது எழுந்து ஓடிப்போவதாகவும் நினைத்துக்கொள்கிறோம். இதில் இருட்டை விரட்டுகிறேன் என்று வீரவசனம் வேறு. வெளிச்சம் இல்லாமை தான் இருட்டு என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

நமது மனதிற்குள் பயம் என்று சொல்கிறோம் பாருங்கள் அதுகூட இருட்டு மாதிரித்தானாம். ஞானிகள் சொல்கின்றனர் வெளிச்சம் இல்லாமை, இருட்டு என்கிறோமல்லவா அதேபோல் அன்பு இல்லாமை தான் பயம் என்கின்றனர். அன்பில்லாத ஒரு நிலைதான் பயம். அன்பு என்ற விளக்கை அங்கே ஏற்றிவைத்து விட்டால் பயம் என்ற இருட்டு அங்கே இருக்காது.

சூஃபி இலக்கியத்தில் ஒரு சம்பவம் வரும். முல்லா நஸ்ருதீனுக்குக் காலையில் திருமணம. அன்று மாலையில் அவரும் அவரது இளம் மனைவியும் உறவினர்களுடன் ஆற்றைக் கடந்து போய்ககொண்டிருந்தார்கள். திடீரென்று புயல், வெள்ளம் வந்துவிட்டது. படகு இப்படியும் அப்படியும் ஆட ஆரம்பித்துவிட்டது. எல்லோருக்கும் பயம். முல்லா மட்டும் பயமில்லாமல் அவர் பாட்டுக்கு இருந்தார். "உங்களுக்குப பயமில்லையா?" என்று கேட்டார் அவரது மனைவி மிகவும் ஆச்சரியமாக. இதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் கூறவில்லை. இருப்பில் இருந்த ஒரு கத்தியை எடுத்தார். மனைவியின் கழுத்திற்கு நேராக நீட்டினார். குத்தப்போவது போல் ஓங்கினார். அவரது முகத்தில் எந்தச் சலனமும் இல்லை.

இப்போது முல்லா கேட்டார். "உனக்குக் கத்தி என்றால் பயமிலலையா?" என்றார். இதற்கு அவர் "கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால் அதைப் பிடித்திருப்பவர் என்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் என் கணவர் அதனால் நான் பயப்படவில்லை" என்று பதில் கூறினார்.

இப்போது முல்லா சொன்னார் "அதேபோல் எனக்கும்இந்த அலைகள் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால் இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் அல்லா அன்புமயமானவர் அதனால் எனக்குப் பயமில்லை''எனறார்.

அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது.நம்பிக்கை இல்லாவிட்டால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லாவிட்டால் பயம் வந்திருக்கும். படகிலிருந்த மறறவர்கள் மாதிரி அவரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்திருப்பார். இந்த உண்மையை நமது வாழ்க்கையிலும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நமக்குப் பயம் ஏற்பட்டதென்றால் என்ன அர்த்தம். நம மீதே நமக்கு நம்பிக்கை இல்லை என்று அர்த்தம். நான் கடவுளுக்குப் பயந்தவன் என்று சொல்வார்கள் பாருங்கள். அது மிகவும் அபத்தமானது என்று கூறுகின்றனர் பெரியோர். அங்கே செலுத்த வேண்டியது அன்பே தவிர பயம் அல்ல. நமது உபநிடதங்கள் கூறும் மிகப் பெரிய விடயமே 'பயம் இல்லாமல் இரு' என்பது தான் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் பெரியவர்கள் கூறும் அறிவுரை என்ன தெரியுமா? எதிர்காலத்தைப் பற்றித்திட்டமிடுங்கள் தவறில்லை. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனைகளில் பயந்து கொணடிருக்காதீர்கள் அதனால் உங்கள் மகிழ்ச்சி தான் பாழாகும்.

ஒருவர் டாக்டரிடம் வந்தார். "டாக்டர்! பதினைந்து வருடங்களுக்கு முன்பாக ஒருமுறை உங்களிடம் வைததியத்திற்கு வந்தேன். காலில் அடிபட்டு வந்தேன். காலில் கட்டுப போட்டு விட்டு தண்ணீர் படாமல் பார்த்துக கொள்ளச் சொன்னீர்கள் என்றார்."அதற்கு என்ன இப்போது?" என்றார் டாக்டர். "இனிமேல் நான் குளிக்கலாமா? என்று கேட்பதற்காக வந்தேன்'' என்றார் அவர்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அவசரசேவை இடர்காப்பு முகாமைத்துவ சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேற்றம்

### திநேஷ் குணவர்த்தன -இரா. சம்பந்தன் வாக்குவாதம்

(கொழும்பு)

அவசர இடர்காப்பு முகாமைத்துவ சட்ட மூலம் இரண்டாவது முறை வாசிப்பில் நேற்று முன்தினம் 40 மேலதிக வாக்குகளினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சட்ட மூலம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது அதற்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் கிடைத்தன.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பன அரசாங்கத்துடன் இணைந்து ஆதரவாக வாக்களித்தன.

தமிழத்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சட்ட மூலத்துக்கு எதிராக வாக்களித்தனர். குறித்த சட்ட மூலம் வாக்கெடுப்பிற்கு பின்னர் நிலையியல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலம் தொடர்பான திருத்தங்களை விவாதிக்கும் அதேவேளை, இந்த நிலையியல் குழுவில் மாகாண முதலமைச்சர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

வாக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே அமைச்சர் திநேஷ் குணவர்த்தனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இரா சமபந்தனுக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் வாக்கெடுப்பு அவசியம் இல்லையென தமிழத்தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்த போதும் பின்னர் பாராளுமன்றத்தில் பிரவேசித்த பின் தமது முடிவை மாற்றிக் கொண்டதாக அமைச்சர் திநேஷ் குணவர்த்தன தெரிவித்த போதே இவ்வாக்குவாதம் இடம்பெற்றது.

வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னர் உரையாற்றிய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே எதிர்க்கட்சி முன்மொழிந்த திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் இணங்கியதென்று தெரிவித்தார். (ந-8)

# நாடு பிளவுபடாது வகையில் அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்

### ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

நாட்டைப் பிரிக்காது தேசியப் பிரச்சினைக்கு நிரந்தர சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம் உறுதிகொண்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.



இக்குறிக்கோளை அடைவதற்கு விரிவான முறையில அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதற்கு வழிவகுக்கும் வகையில் அரச நிர்வாக கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது அவசியமெனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி தமது தலைமையின் கீழ் முன்னைய பொது ஜன ஐக்கிய முன்னணியும தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கமும் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர் வொன்றை எட்டுவதையே கொள்கையாகக் கொண்டுள்ளன என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பேச்சுவார்த்தைகளின மூலம் வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டுமென்பதே 85 சதவீதத்திற்கும் கூடுதலான மக்களின் விருப்பமாகும்.

யுத்தத்தின் மூலம் தான் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்ற எண்ணம் கொண்ட ஒரு சிலரின் கொள்கைகளை முறியடித்து சமாதான முயற்சிகள் முனனெடுக்கப்படவேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இதேவேளை, இலங்கையில் பெண்களுக்கு விரிவான தலைமைத்துவப் பயிற்சி ஒன்றை அளிப்பது அவசியம் என்றும் உளளூர் பொருளாதாரத் துறையில் பெண்கள் கணிசமான பங்கை வகிக்கிறார்கள். ஆயினும் அரசியல் நடவடிக்கைகளில் அவர்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரசியலும் பெண்களுக்கு உயர்ந்த இடத்தை அளப்பதற்கான சூழ்நிலை 1994 ஆம் ஆண்டின் பின் உருவாகியுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (க-7)

### சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கு;

## பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

(கொழும்பு)

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலை வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப் பத்திரத்தை சட்டமா அதிபர் கொழும்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

பிரதிவாதிகள் ஐந்து பேருக்கு எதிராக இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான்கு பிரதிவாதிகளுக்கு எதிராக கொலைக் குற்றத்தின் அடிப்படையிலும் ஒருவருக்கு எதிராக கொலை செய்வதற்கான சதிசெய்தமை அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை என்ற அடிப்படையிலும் குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 19ஆம்திகதி மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் நீதிபதியின் வீட்டிற்கு முன்னால் வைத்துத் கொலை செய்யப்பட்மை தெரிந்ததே. (ந-8)

# முஸ்லிம் மக்களின் விடயங்கள் தொடர்பில் புலிகள் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளனர்

### வடமாகாண உலமாக்களின் நலன்புரிச் சங்கத் தலைவர் முபாரக் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றனவோ அதேபோன்று முஸ்லிம் மக்களுக்கும் அங்கு சகல உரிமைகளும் உண்டென தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உறுதிப்படுத்தியிருப்பதாக வடமாகாண நலன் புரிச் சங்கத் தலைவர் எம்.ஐ.எம் முபாரக் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை தமிழீழ விடுதலைப்புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு என்.ஐ.எம்.முபாரக் சென்று வந்தார்.

அது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியைச் சென்றடைந்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கனைச் சந்தித்தார். அவரைச் சந்தித்து சுமார் ஒரு மணித்தியாலம்வரை வடபகுதி மக்களின் பிரச்சினைகள் வடபகுதி முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் என்பன பற்றி சுமுகமாக சினேக பூர்வமான முறையில் கலந்துரையாடினோம்.

உண்மையில் விடுதலைப்போராட்டம் என்பது இந்த மண்ணிலே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் சமபங்குள்ள ஒரு போராட்டமாகும். என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனவோ அவற்றைப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என நாங்கள் முறையிட்டோம்.

அதுமாத்திரமல்ல வடபகுதியில் உள்ள பள்ளி வாசலகள் எல்லாம் இயங்கவேண்டும். முஸ்லிம் மக்கள் மீண்டும் அச்சமில்லாமல் குடியிருக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டிலேயே விடுதலைப் புலிகள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்ததாகவும் முபாரக் குறிப்பிட்டார். (ந-4)

## நிவாரண முத்திரைத் தகராறில் கிராம சேவகருக்கு கத்திக்குத்து

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு நிவாரண முத்திரை வழங்கப்படவில்லையென்ற காரணத்தினால் ஏற்பட்ட முறுகல் நிலையின் போது கிராமசேவகர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த கிராம சேவகர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாா தெரிவித்தனர்.

அம்பலாங்கொடைப் பகுதியில் இடம்பெற்ற முறுகல் நிலையை அடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்தியால் குத்தியவர் தப்பிச் சென்றுள்ளதாகவும், அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ந-8)

# நடமாடும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கான அரசியலமைப்புத் திருத்தம் முன்வைக்கப்படும்

## ஐ.தே. கட்சி தீர்மானம்

(கொழும்பு)

நடமாடும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களைச் செயற்படுத்துவதற்கான உத்தேச 18 ஆவது அரசியலமைப்புக்கான திருத்தத்தை எட்டுமாவட்டங்களில் முன வைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கட்சியின் பரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க இதனைத் தெரிவித்தார்.

நடமாடும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கு நீதியரசர்களை நியமிக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவருக்கு வழங்கபபடவேண்டுமென்ற திருத்தம் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக இந்த அதிகாரம் பிரதம நதியரசருக்கு வழங்கப்பட்டுளளது. (ற-8)

## கட்டுநாயக்க விமானநிலைய வான்படை தளத்தை அகற்ற நடவடிக்கை

(கொழும்பு)

கட்டுநாயக்க வானூர்தி தளததில் அமைந்துள்ள வான் படைத் தளததை அங்கிருந்து அகற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சர் மங்கள சமரவீர இநதப் பிரேரணையை நேற்றுமுன் தினம் அமைச்ரவை கூடடத்தில் சமர்ப்பித்த வேளை, அதனை தம்புள்ளவில் அமைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டு அந்த யோசனை ஏற்றுக்கொள் ளப்பட்டதாகத் தொிவிக்கப்படுகின்றது.

இதனை நடைமுறைப்படுத்துவதறகான உபகுழுவை அமைப்பதற்கான தீர்மானம் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மின்சாரசபையில் தற்காலிகமாக கடமைபுரியும் ஆயிரம் மானிவாசிப்பாளர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கைக்கும் அமைச்சரவைக்கு அங்கீகாரம் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-9)

## கூடாரங்களுக்குப் பதிலாக விரைவில் நிரந்தர வீடுகள்

(கொழும்பு)

கடற் பேரலைகளினால் வீடுகளை இழந்தோருக்கு கூடாரங்களுக்குப் பதிலாக விரைவில் நிரந்தர வடுகள் அமைத்துக் கொடுககவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் அபயவர்த்தயாப்பா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் 100 வீடுகளை அமைத்துக்கொடுக்கும வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களினால் நிரந்தர வீடுகளை அமைக்கும் திட்டம் தாமதமடைகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-8)

## "பலிக்களம்" மேடையேறுகிறது

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவில் திருமறைக கலாமன்றததினர், தவககால பக்தி - இசை- உரை நாடகமான பேராசிரியர் நீ.மரியசேவியர் எழுதிய "பலிக்களம்" என்னும் பக்தி நாடகத்தினை இன்று அளம்பில் அந்தோனியார் ஆலய முன்றலிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தவு இரனைப்பாலை விளையாட்டு மைதானத்திலும் மேடையேற்றவுள்ளனர்.

மேற்படி பலிக்களத்தினை கலாபூசணம் ஜீ.பி.பேர்மினஸ் நெறியாழ்கை செய்கின்றார்.

சுனாமி அனர்த்தங்களை வெளிப்படுத்தி அதன்மூலம் மக்களிறகு ஆறுதலளிக்கும் முகமாக முல்லைத்தீவு அளம்பில் திருமறைக் கலாமன்ற மக்களை நடிக்கவைத்துச் செய்யப்படும் இவ் ஆற்றுகையில் 150 கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர். (க-51)

# பாரிய மீன்பிழக் கலங்களின் பயன்பாடு மீன்பிழித்துறைக்கு பெரும் அச்சுறுத்தல்!

## ஏற்படுத்தும் என ஐ.நா விவசாய அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர், இலங்கை மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாரிய மன்பிடிக்கலங்களினால் மீனபிடித்துறைக்குப பெரும் அச்சுறுத்தல் ஏற்படலாம் என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுனாமிப் பேரலை தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட படகுகளுக்குப் பதிலாக 10ஆயிரம் மீனபிடிக்கலங்களை அன்பளிப்பு செய்ய் தொண்டு நிறுவனங்கள் இணங்கியுள்ளதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியது.

இதேவேளை, சுமார் 7ஆயிரம் சிறிய அளவிலான மீன்பிடிக் கலங்கள் இந்த அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டதாக இலங்கை அரசாங்கம தெரிவித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கை பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வழங்கப்படும் புதிய மீன்பிடிக்கலங்கள் ஊடாக மீன்பிடியாளர்களிடையே போட்டித்தன்மை அதிகரித்து மீன்பிடி வீழ்ச்சி அடைய வாய்ப்பு இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (க-9)

## இடமாற்ற நடவ்டிக்கை

(முல்லைத்தீவு)

சுனாமிப் பேரழிவனபோது சேதமாக்கபபட்ட முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையை முல்லைத்தீவில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றுவதற்காக தேவையான நிலததினை தனியாரிடமிருந்து பெறும் முயற்சிகள மேற்கொளளப்பட்டு வருகின்றது.

இதற்கான நடவடிக்கைகளை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினமும மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமாரனும மேற கொண்டுள்ளனர். (ப-128)

## தீவகத்தில் வெப்ப நோய

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலுள்ள பல இடங்களில் பரவலாகக் கண்நோய், பொக்களிப்பான், கூவைக்கட்டு ஆகிய வெப நோய்கள் பரவி வருவதாகத் தெரியவருகின்றது. (ப)

## பொங்கல் விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பொது வைத்தியசாலையிலுள்ள ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை முப 10 மணிக்கு பொங்கல விழா நடைபெற்றது. (ப)



இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி கலீம் சதாத்துக்கு விமானப்படைத் தலைமையகத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

## "கிராமத்தின் சிரிப்பு" நூல் வெளியீட்டு விழா

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக் கலலூரிச் சமூகமும், இணுவில் தெஸபயன் கலைவட்டமும இணைந்து, மட்டுவில் ஆசிரியா க.அருந்தவராசா எழுதிய 'கிராமததின் சிரிப்பு' நூல்வெளியீட்டு விழாவை இன்று நடாத்துகின்றது.

செங்குந்த இந்துக் கல்லூரி மணடபத்தல் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், கல்வியியற் பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராஜா, தமிழீழக் கல்விக் கழகத்தின் பொறுப்பாளர் க.ஆர்வலன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குகொள்கின்றனர்.

இந்நூலின் முதன்மைப் பிரதிகளை யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச சங்கத்தின் தலைவா வைத்தியக் கலாநிதி வை.தியாகராஜாவும், இலங்கை வங்கியின் உதவி முகாமையாாளர் தி.ஸ்ரீஸ் கந்தராஜாவும், வா.இராதாகிருஸ்ணன் மற்றும் எஸ்.ராஜதுரை ஆகியோர் பெறவுள்ளனர்.

நூல் பற்றிய வெளியீட்டுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணியும், ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செ.திருநாவுக்கரசும் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் இந்நூல் பற்றிய அறிமுகவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிமை பிற்பகல் 3மணிக்கு மட்டுவில் மகாவித்தியாலயத்தில் அதிபர் புலவர் எம்.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# இராமநாதன் நுண்கலைக்கழகத்திற்கு 'Z' புள்ளி அடிப்படையில் மாணவர்கள் தெரிவு பாதிக்கப்பட்டோர் ம.உ.குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாம்.பல்கலைக்கமக இராமநாதன் நுண்கலைக்கழகத்திற்கு 2004/2005ஆம் கல்வியாண்டுக்காக மாணவாகள் தெரிவுசெயயப்பட்ட முறைமையினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து விசாரணை நடத்தி தமக்கு சிறந்த முடிவொன்றைப் பெற்றுத்தருமாறும் கோரி கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டிய மாணவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

பாதிக்கபபட்ட 44 கர்நாடக சங்கீத மாணவர்களும் 25 பரதநாட்டிய மாணவர்களும் கையொப்பமிட்டு நேற்றையதினம் மனித உரிமை அணைக்குழுவில் செய்துள்ள இம்முறைப்பாட்டில்,

இராமநாதன் நுண்கலைக் கழகத்தற்கு விண்ணபிக்க ஆகக் குறைந்த 'ஆம்' என்ற அடிப்படைத தகமை கொண்ட விண்ணப்பதாரிகளிற்கு நேர்முகப்பரீட்சை நடைபெறுவது 2003ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த ஒனறாகும். ஆனால, இவ்வருடம் மட்டும் முறைமாறாக 'Z' புள்ளியின் அடிப்படையில் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி மாணவர்கள் தொிவு செயயப்பட்டுள்ளனர். இதனால் வழமைபோன்று நேர்முகப்பரீட்சை நடைபெறும் என்று எதிர் பார்த்திருந்த மாணவர்கள் இந்த முறையின் மூலமாக பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விண்ணப்பம் தொடர்பான அறிவுறுத்தல் படிவத்தில் அனைத்து விண்ணப்பதாரிகளிற்கும் ஆற்றுகை தோவு .நடைபெறும் என்றும், அதற்குத் தவறாமல் தோறறுதல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பாதிககபபட்ட மாணவாகளுக்கு ஆற்றுகைத் தேர்வோ, நேர்முகப் பாட்சையோ எதுவும் நடைபெறவில்லை.

நாங்கள் கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் போன்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்து கற்பதன் நோக்கமே இராமநாதன் நுண் கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்படுவோம் என்பதே ஆகும்.

மாணவர் ஒன்றியத்தினூடாக இவை தொடர்பானவர்களுக்கு முறையிட்டு இதுபற்றி விசாரித்தபோது எமக்கு எந்தவிதமான ஆக்கபூர்வமான பதில் எதுவும் அளிக்கப்படவில்லை.

ஏனைய பாடங்களாகிய பண்ணிசை, வயலின், சித்திரமும வடிவமைப்பும ஆகிய பாடங்களிற்கு 'Z' புள்ளி அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படவில்லை. ஆனால், பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம் ஆகிய இரு பாடங்களிற்கு மட்டுமே 'Z' புள்ளி அடிப்படையல் மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட ரீதியாக மாணவர்களை நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யபபடாதமையால் பின் தங்கிய மாவட்டங்களைச் சேர்நத மாணவர்கள் பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். எனவே இம்மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களிற்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக்கொடுக்குமாறு தாழமையுடன் கேட்டுககொளகின்றோம்.

'Z'புள்ளிரீதியில் மாணவர்களை இராமநாதன் நுண்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப் படும்போது அதே மாணவர்களே தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவுசெய்யப்படுவார்கள். எனவே பாதிககப்படட மாணவர்களே இதன் மூலம் பாதிப்பிற்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

எனவே, எமககு இது தொடர்பாக சிறந்த ஒரு முடிவினைத் தங்களிடம் இருந்து தயவுடன் எதிர்பார்க்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-19)

## ஏற்பு ஊசி மருந்து இல்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பொது வைத்தியசாலையில் ஏற்பு ஊசி மருந்து இல்லாததால் அங்கு வரும் நோயாளிகள் யாழ.ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவதாக வைததிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ப)

## குடும்பத்தில் கத்தி வெட்டு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மசாலைப் பகுதியல் குடும்பஸ்தர் ஒருவர் கத்தி வெட்டுககு இலக்காகிய நிலையல் நேற்றுமுன்தினம் இரவு 11மணியளவல் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வீட்டிலிருந்த சமயம் சைக்கிளில் வந்த சிலர் அவரை கத்தியால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களுககிடையிலிருநத நண்டகாலப் பகையே கத்தி வெட்டில் முடிந்துள்ளது.


இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த முருகன் விவேகானந்தன் (வயது 55) என்பவரே கத்தி வெட்டுக்கு இலக்கானவராவார். (ச-4,8)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## விலங்குகளின் புலம்பெயர்வு (Animal migration)

(தொடர்ச்சி...)


மூலையூட்டிகளில் - **Whales, Walruses, Sealions, Dolphins, Porpoises, Oryx** (படம்2).



மூலையூட்டிகளின் புலம்பெயர்வு

மீனினங்களில் - **eels salmon herring mackeral.**

பூச்சியினங்களில் - **Monarch butterfly** (படம்3).



**monarch butterfly**

இவை புலம்பெயரும் போது குளிர்பிரதேசங்களில் மரக்கிளைகளில் காலத்தைக் கழிக்கும் **(semi hibernation).**

கூடுதலான தூரத்தில் புலம் பெயரக்கூடியவை.

புலம்பெயரும் திசை, தூரம், காலம் என்பன எல்லா விலங்குகளிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. இதற்கேற்ப புலம்பெயர்வைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**Latitudinal migration** - இதன் போது விலங்குகள் பூமியின் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியோ அல்லது தெற்கிலிருந்து வடக்கு நோக்கியோ புலம்பெயரும். இவ்வாறான புலம்பெயர்வின் மூலம் தாம் வாழும் சூழலின் காலநிலையை மாற்றிக்கொள்ளும்.

**Altitudinal migration** - இது பொதுவாக மலைப்பிரதேசங்களில் நிகழும் வெப்ப காலங்களில் **(summer)** மலை உச்சியில் அதிகளவு புற்றரை காணப்படுவதனால் விலங்குகள் உணவுத்தேவைக்காக மேல்நோக்கிப் புலம்பெயரும். ஆனால் குளிர்காலங்களில் **(winter)** உச்சியில் பனிமூட்டம் காரணமாக கீழ்நோக்கி இடம்பெயரும்.

**Reproductive migration** - இனப்பெருக்கத்திற்காக விலங்குகள் தமக்கு சாதகமான இடத்தை நோக்கிப் புலம்பெயரும். இப்புதிய சூழலானது இளம் பருவங்களின் வளர்ச்சிக்குரிய உணவு கிடைக்கக்கூடியதாகவும் அத்துடன் இரைகௌவிகளின் தாக்கம் குறைவானதாகவும் இருக்கும். இதன்மூலம் அவை தமது எச்சங்களைப் பாதுகாக்கும்.

**Eg:salmon** எனப்படும் மீனினத்தின் புலம்பெயர்வு.

**Nomadic migration** - சில விலங்குகள் தமக்கு பழக்கப்பட்ட இடமல்லாத வேறு இடங்கட்கு உணவுத் தேவைக்காக நாடோடியாக அலைந்து திரிதல்.

**Eg:** பசும்புற்தரையைத் தேடி மேய்ச்சல் விலங்குகள் தூர இடங்கட்கு இடம்பெயர்தல்.

**Removal migration** - சூழலில் இருக்கும் சாதகமான வளங்களான உணவு, நீர், இருப்பிடம் போன்றன காட்டுத்தீ, வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கை காரணிகளினாலும், காடழித்தல், நகரமயமாக்கல் போன்ற மனித செயற்பாடுகளினாலும் அழிவடைகின்றபோது விலங்குகள் அவ்விடத்தை விட்டு நிரந்தரமாக சாதகமான வேறு இடங்கட்கு இடம்பெயர்கின்றன. சில சமயங்களில் சாதகமான வளங்கள் இருந்தபோதிலும் குடித்தொகையினளவு **(population size)** கூடும்போது எல்லா விலங்குகளுக்கும் அவசியமான உணவு, நீர், இருப்பிடம் போன்றவற்றின் தட்டுப்பாட்டாலும் இவ்வகை இடம்பெயர்வு நிகழும்.

**Irruptive migration** - விலங்குகளின் இவ்வகையான இடம்பெயர்வானது புவியியல் ரீதியாகவோ அல்லது காலநிலை ரீதியாகவோ எதிர்வு கூறமுடியாது. சிலவேளைகளில் குறிப்பிட்டவொரு காலத்தில் நிகழ்ந்து பின்பு பல வருடங்களிற்குப் புலம்பெயராது.

புலம்பெயர்வின் தூரமும், ஈடுபடும் விலங்குகளின் எண்ணிக்கையும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சில காலங்களில் இது கூடுதலான தனியன்களுடன் கூடியளவு தூரத்திற்கும் சிலவேளைகளில் குறைந்தளவு தனியன்களுடன் குறைந்தளவு தூரத்திற்கும் நிகழும்.

* * *

# விஞ்ஞானத் துளிகள்

S.கங்கா
யாழ்.பல்கலைக்கழகம்.

## நன்றாகத் தூங்க சில வழிகள்

* பகலில் குட்டித் தூக்கம் வேண்டாம்.

* தூக்கம் வந்தவுடன் குறிப்பிட்ட நேரத்திற்குப் படுக்கைக்குப் போக வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் காலையில் எழவேண்டும். சோம்பேறித்தனத்துடன் படுத்திருக்கக்கூடாது.

* இரவு நேரத்தில் மது, தேநீர், புகை வேண்டாம்.

* இரவில் அதிகமாக திரவங்களை குடிக்க வேண்டாம்.

* உறங்கப்போகும் இரண்டு மணி நேரத்திற்கு முன்பு பால் குடிக்கலாம்.

# எண்களால்

## உடல் எண் 6 உயிர் உண் 8

6,15,24 போன்ற திகதிகளில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர்எண் 8வருமேயானால் இவர்கள் சுக்கிரன், சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரத்துடனும், சிறிது மிகுந்த சிவந்த கண்களுடனும் காட்சியளிப்பர். எந்தப் பொருளையும் உன்னிப்பாகக் கவனிப்பர். கடுமையாக முயன்று வெற்றி பெறுவதே இவர்கள் இலட்சியம்.

போக விஷயங்களில் அதிக நாட்டமுடைய இவர்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கும் எனத் தெரிந்தவுடன் அதைக் குறைத்துக்கொள்வர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் தங்களுடைய கடுமையான உழைப்பால் தான் உயரமுடியும் எனக்கூறுவர்.

இவர்கள் மனம், மோட்டார் எலக்ட்ரிக் சாதனங்கள், கவிதை, கதை, ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றில் லயிக்கும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள், இளமையிலே வசதி படைத்தவர்களாக இருந்தாலும், பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் தமது தனித்தன்மையால் உயர்வர்.

ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் இவர்களது வாழ்வில் அடிக்கடி தோல்வியைச் சந்திக்க நேரிடும். உலகிலுள்ள அனைத்து விஷயங்களையும் தெரிந்துவைத்திருக்கும் இவர்கள் எப்போதும் எதையாவது செய்துகொண்டேயிருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவதாலும் தம் தகுதியை உயர்த்திக்கொள்வர்.

இவர்களுக்குப் பெயர் மட்டும் பொருத்தமானதாக அமைந்துவிடுமேயானால் தாம் வகிக்கின்ற உத்தியோகத்திலோ, அல்லது தாம் செய்யும் தொழிலிலோ உயர்ந்த நிலையை அடைவர்.

மறைத்துப் பேசத்தெரியாத இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடுவர். இவர்களுடைய மனம் வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களைப் பார்ப்பதிலும், பெரிய தொழிற்கூடங்களைக் கண்டுகளிப்பதிலும் ஆர்வம் காட்டும். இவர்களுடைய பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால், நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வாழ்வர்.

ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமற்ற பெயர் அமைந்துவிட்டால் வீண் குழப்பங்களும், விரயச் செலவுகளும் வந்து எதிர்நிற்கும். பிறருக்காக ஒரு பிரச்சினையில் இறங்கும்போது துணிவாகச் செயல்படுவர். ஆனால் தனக்கென்றுவரும்போது மிக அமைதியாக செயல்படுவர். இவர்களிடம் யோசனை கேட்பதற்குப் பலர் வருவர்.

சட்டம், சமயம், மருத்துவம், கணிதம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். இவர்கள் எத்துறையில் இறங்கினாலும் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறும் வாய்ப்புள்ளது. ஆனால் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமற்ற பெயராக இருக்குமேயானால் முன்னேற்றம் தடைப்படும். இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களில் உத்தியோகம் பார்ப்பவர்கள் சிலர். ஆனால் தொழில் செய்பவர்கள் பலர். வாகனம் ஓட்டுவதிலும், வாகனத்தை அலங்கரித்து வைத்துக் கொள்வதிலும் ஆர்வம் உடையவர்களாக இருப்பர். தூரதேசப் பயணங்கள் மேற்கொள்வதில் ஆர்வம் காட்டும் இவர்கள், தாம் செய்கின்ற பயணம் எதிர் காலத்தில் நல்ல வருவாய்க்கு வழிகாட்ட வேண்டும் என எண்ணுவர். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

# ஏற்றமிகு வாழ்வு

**தொழில்** :-இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு சம்பந்தப்பட்ட, நெருப்பு சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலும் சிறந்தவையே. மேலும் ஆடம்பரப் பொருட்களாலும், கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ் போன்றவற்றாலும் லாபம் பெறுவர்.

Dr. ஆர்.ஐ. துரைமுருகர்

**நோய்** :- சுக்கிரன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக்கோளாறு, மலச்சிக்கல், உஷ்ண சம்பந்தப்பட்ட நோய், மூட்டுவலி, ரத்தக் கொதிப்பு போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**:- சுக்கிரன், சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சுக்கிரன், புதன், சூரியன் ஆதிக்கமான 15,24,33,42,51,60,69, 14,23,32,41,50,59,19,37,46,64 போன்ற எண்களில் பெயர் அமைத்துக்கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை:-**

| | |
|---|---|
| யோகமான எண் | - 6,5,1 |
| யோகமான திகதிகள் | - 6,15,24,5,14,23 |
| யோகமான மோதிரக்கல் | - மரகதம், நீலக்கல் |
| யோகமான நிறம் | - பச்சை, நீலம், மஞ்சள் |
| ஆகாத நிறம் | - கறுப்பு,சிவப்பு,ரோஸ், ஒரேஞ்சு, கத்தரிப்பூநிறம். |
| ஆகாத திகதிகள் | - 3,12,21,30 |

(தொடரும்)

பழுதென்னும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும் - குறள்

வலம்புரி

# நாட்டைக் குழப்பப் பிறந்தவரில் இவரும் ஒருவரல்லவோ!

விடுதலைப்புலிகள் யுத்தவிமானத்தை கொள்வனவு செய்துள்ளார்கள்- கொழும்பை அழிக்கப் போகிறார்கள் இவ்வாறு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ஓலக்குரல் எழுப்பி உள்ளார்.

விடுதலைப்புலிகளிடம் விமான ஓடுபாதை உண்டு என்ற சமாச்சாரம் ஏற்கனவே வெளிவந்ததுதான்றே.

விடுதலைப்புலிகளிடம் விமான ஓடுபாதை இருப்பதாக விமானப்படைத்தளபதி தம்மிடம் கூறியதாக நோர்வேயின் பிரதிநிதி ஒருவர் தமிழ்ச்செல்வனிடம் ஒருமுறை கூறியிருந்தார்.

அதற்கு தமிழ்ச்செல்வன் 'விமானஓடுபாதை எம்மிடம் இருப்பதை ஞாபகப் படுத்தியமைக்காக இராணுவத்தளபதிக்கு நன்றி கூறுவதாகத் தெரிவித்தார்'

அதேவேளை விடுதலைப்புலிகளிடம் விமானம் இருக்கின்ற செய்திகள் உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தன இவையாவும் பழங்கதை. விமான ஓடுபாதையும் விமானமும் விடுதலைப்புலிகளிடம் இல்லாவிட்டால் சமாதானப் பேச்சுபற்றி சிங்கள அரசுகள் சிந்தித்திருக்குமா என்பது கேள்விக்குரியது.

விடுதலைப்புலிகளின் ஆயுத- ஆட்புல படைப் பலத்தின் காரணமாகவே இலங்கை அரசு யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்வதற்கும் ,சமாதானப் பேச்சை நடத்துவதற்கும் முன்வந்தது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அண்மையில் யாழ்.நகரமையத்தில் நடந்த இராணுவ வாகனவிபத்தைத் தொடர்ந்து பெரும் களேபரம் ஏற்பட்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் ஆத்திரம் கொண்டு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் வைத்திருந்த ஆயுதங்களை பறிக்கமுற்பட்டனர் இதன்போது இராணுவத்தினரும் பொலிஸாரும் மிகுந்த அமைதியைக் கடைப்பிடித்தனர்.

தமிழ் மக்கள் ஆயுதத்தைப் பறிக்க முற்பட்ட வேளை இலங்கை இராணுவம் அமைதிகாக்கின்றது எனில் அது அதிசயமான-ஆச்சரியமான சம்பவமாகும்.

இந்த அதிசயமான சம்பவம் நிகழ்வதற்கு சிங்கள இராணுவத்தினர் புத்தபிரானின் போதனையை முழுமையாகப் படித்துவிட்டார்கள் என்றோ அன்றி, பௌத்த பிக்குகள் அவர்களுக்கு அகிம்சைவழியை போதித்திருக்கிறார்கள் என்றோ அல்லது இலங்கை அரசு எல்லாமக்களையும் சமகண் கொண்டு பார்க்குமாறு இராணுவத்திற்கு புத்திமதி கூறியுள்ளதென்றோ காரணம் கூற முடியாது.

இவைதான் காரணம் என்றால் கடந்த 20 வருடகாலமாக தமிழ்மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள் -தமிழர் தாயகப் பகுதிகளில் விமானக் குண்டுவீச்சு, பல்குழல் தாக்குதல் என்பன நடந்திருக்கமாட்டாது.

அப்படியானால் எப்படித்தான் இராணுவத்தினர் அடக்கமாக இருந்தார்கள் என மீளவும் நீங்கள் கேட்டால் அதற்கான ஒரேபதில் விடுதலைப்புலிகள் மீது இராணுவத்திற்கு இருக்கக்கூடிய பயம் என்பது மட்டுமே காரணமாக இருக்கமுடியும்.

இதனை உறுதிசெய்வதாக இன்னுமோர் யுத்தத்தை ஆரம்பித்தால் நாம்வெல்லமுடியாது என ஜனாதிபதி ஆற்றிய உரை அமைந்துள்ளது.

ஆக, இந்தநாட்டை குழப்பவந்த நான் மட்டும் ஏன் பேசாமல் இருப்பான் என்பதுபோல பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் விடுதலைப்புலிகளிடம் யுத்தவிமானம் இருப்பதாகவும் கொழும்பு அழியப்போவதாகவும் ஓலம் இடுகிறார்.

புலிகள் விமான ஓடுபாதை வைத்திருப்பது கார் ஓடுவதற்காகவல்ல என்பதை பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அறியவேண்டும். அதேவேளை யாழ்ப்பாணத்தில் யுத்தவிமானம் குண்டு போட்ட போது தமிழ்மக்களுக்காக ஒரு வார்த்தை குரல் கொடுத்திருந்தால் இன்றைய ஓலம் தேவையற்றதாக இருந்திருக்கும்.

## மனித உரிமை, சிறுவர் உரிமை தொடர்பில்

# மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ் -இராணுவத்திற்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு ஒன்றே நடத்தப்பட்டு வருகின்றது.

இக் கருத்தரங்கினை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ரூவான் சந்திரகேரா, விசாரணை அதிகாரி பெரோஸ் ஆகியோர் நடத்தி வருகின்றனர்.

சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை, மானிப்பாய் மற்றும் வட்டுக்கோட்டை ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலிஸாருக்கு இம மனித உரிமை, சிறுவர் உரிமை தொடர்பான கருத்தரங்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. (ற-19)

# முதலீட்டு சபை பாரிய முதலீட்டு திட்டங்களில் கைச்சாத்திட்டது

(கொழும்பு)

இலங்கை முதலீட்டு சபை, மேலும் பல பாரிய முதலீட்டு திட்டங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

இவை ஆடை, ஆபரண, கணனி மென்பொருள், றப்பர் உற்பத்தி தொடர்பான ஏற்றுமதித் துறைசார் திட்டங்கள் ஆகும்.

இத்திட்டங்களுக்கு அமைய "கொம்பஸ் இன்ரநஷனல் நிறுவனம்" ஆடை உற்பததித் தொழிற்சாலையை அமைக்க முன்வந்துள்ளது.

இதற்கான முதலீடு 35 கோடி ரூபாவாகும்.

இந்தத் தொழிற்சாலையில் 2 ஆயிரத்து 600 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும்.


"பிறண்டிஸ் அக்பண்வெயர் தனியார் நிறுவனம்" 3 கோடி 60 லட்சம் ரூபா முதலீட்டில் மற்றுமொரு ஆடை உற்பத்திச் சாலையை ஆரம்பிக்கும்.

"மொபைல் லங்கா தனியார் நிறவனம்" 24 கோடி ரூபா முதலீட்டில் கணனி மென்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையையும்,

வரையறுக்கப்பட்ட "அலங்கார் தனியார் நிறுவனம்"15 கோடி ரூபா முதலீட்டில் ஏற்றுமதிக்கான ஆபரணங்களை வடிவமைக்கும் தொழிற்சாலையை நிறுவவுள்ளன.

இதேவேளை, மேற்படி தனியார் நிறவனங்கள் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலம் பல இளைஞர்கள், யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் எனத் தொழில் அமைச்சர் மகிழ்ச்சி தெரிவித்தார். (க-60)

# "உதைபந்தாட்டம்" நூல் வெளியீடு







(யாழ்ப்பாணம்)

"உதைபந்தாட்டம்" நூல் வெளியீட்டு வைபவம் நேற்று முன்தினம் மாலை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நூலின் முதற்பிரதியை யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் டி.எம்.ஏ குணசிங்கத்திடமிருந்து தொழிலதிபர் ஜீவா பெற்றுக் கொள்வதையும், மேடையில் யாழ். மாவட்ட முன்னாள் விளையாட்டு பணிப்பாளா மரியதாஸ், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை, நூலாசிரியர் டேவிட் தம்பிராஜா, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் சி.நடராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்ட விளையாட்டு அதிகாரிகள், ஆர்வலர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

( படங்கள்: ஞா. ஐங்கரன்)

# தமிழ்-முஸ்லிம் உறவுகள் பாதிக்கப்படக் கூடாது

(மட்டக்களப்பு)

தமிழ் -முஸ்லிம் உறவுகள் என்றும் பிரிந்து வாழவும் முடியாது, பிரிந்து இருக்கவும் முடியாது என ஓட்டமாவடி முஸ்லிம் சம்மேளனத் தலைவர் பிர்தௌவுஸ் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட சில கசப்புணர்வுகளை மறந்து தற்போது தமிழ்- முஸ்லிம் சமூகம் சிறந்த ஓர் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்ற நிலையில் சுயலாபம் தேடுகின்ற சிலரது நடவடிக்கைகள் காரணமாக ஓட்டமாவடிப் பிரதேசத்தைச் சேர்ந்த சாரதி சுட்டுக்கொல்லப்பட்டதை மிகவும் கண்டிப்பதாகவும் அவர் தொிவித்தார்.

வேகமாக வளர்ந்து வருகின்ற தமிழ்-முஸ்லிம் சமூகத்தினாின் உறவுகள் பாதிக்கப்படக் கூடாது. தமிழ்- முஸ்லிம் மக்கள் பிாிந்து வாழவும் கூடாது, பிாிந்து வாழவும் முடியாது. நாம் அனைவரும் தமிழ் பேசும் மக்களே. ஒன்றிணைந்து அமைதியுடனும், பொறுமையுடனும் வாழ வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# புதிய பொலிஸ் அத்தியட்சகர் அரச அதிபருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்தியத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக கே.டி.எல். டல்பட்டு புதிதாக கடமையேற்றுள்ளார்.

ஏறகனவே யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக இருந்த வானகுருவுக்கு பதிலாகவே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக கடமையேற்றுள்ள டல்பட்டு நேற்றுக் காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேசை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

யாழ். பிராந்தியத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் சிறந்த முறையில் வீதி ஒழுங்கு முறைகளை நிலைநாட்டல் என்பன தொடர்பாக இச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ற-19)

ௐ தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

உன்னைப் பலவீனப்படுத்தக் கூடிய எல்லா எண்ணங்களையும் நீ உன் உள்ளத்திலிருந்து விரட்ட விரும்பினால் எப்போதும் நீ விழிப்போடு இருக்க வேணடும. கடவுள் எங்கோ கண்ணுக்கு எட்டாத ஆகாயத தில் இல்லை. இந்த உலகிலுள்ள ஒவ்வொரு உயிரிலும் அவர் இருக்கிறார். ஒவ்வொரு இதயத்திலும் அவர் இருக்கிறார்.

சுவாமி விவேகானந்தர்

# தமிழ்ப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவம் உடன்வெளியேற வேண்டும்

## பெண்கள் பண்பாட்டுமையம் மீண்டும் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் 63 வயதுடைய வயோதிபப் பெண்ணின் மீது பாலியல் வல்லுறவு செய்யமுயற்சித்த சம்பவத்தை பெண்கள் பண்பாட்டு மையம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாம் ஏற்கனவே மார்ச் 8சர்வதேசமகளிர் தினத்தில் அமைதியான முறையில் இராணுவத்திற்கு, ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழ்மண்ணில் குடிமனைகளின் அருகில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது தமிழ்மக்களின் இயல்பு வாழ்விற்கு குறிப்பாக பெண்களின் வாழ்விற்கு பெரும் அச்சுறுததலாக உள்ளது என சொல்லியிருந்தோம

தமிழ்மண்ணில் சிங்கள இராணுவம் இருப்பது பெண்களின் முன்னேற்றத்திற்கான பணிகளைப புரிவதற்கு ஒருபெரும் இடர்தருகின்ற சவாலாக உள்ளது.

நேற்று நீர்வேலியில் நடந்த சம்பவம் மேலும் இதை நிருபித்து காட்டுகிறது. இத்தகைய சம்பவங்கள் மேலும் மேலும் கூடி இனங்களிற்கிடையில் ஒருமோதல் நிலைமைஉருவாகிவிடக் கூடிய ஒரு நிலையில் நாம்உள்ளோம்.

எனவே உடனடியாக தமிழர்களின் குடிமனைகளில் இருந்து சிங்கள் இராணுவம் விலகவேண்டும் என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்திக் கூறவிரும்புகின்றோம் இவ்வாறாக. வலியுறுத்தும் ஒரு பெண்கள் இயக்கத்தில் ஆரம்பவிதியாகவே மார்ச் 8இல் யாழ்ப்பாணத்தில் பெண்கள் பண்பாட்டு மையம் ஒரு நிகழ்ச்சியை நடத்தியிருந்தது. இந்த இயக்கம் பல்கிப்பெருகி பெண்களுக்கான மேம்பாட்டுக்கு போராடவேண்டிய நிலையில் உள்ளது. இதனால் சங்கடமானநிலைமைகளைத் தவிர்த்து உடனடியாக இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் இருந்து விலகவேண்டும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# கொழும்புத் துறைமுகத்தில் இந்திய போர்க்கப்பல்கள்

(கொழும்பு)

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான மூன்று போர்க்கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் நேற்று நங்கூரமிட்டு நின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கடற்படையுடனான பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் இந்தியக் கடற்படைக் கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை நாடுகின்றன.

இந்த போர்க்கப்பல்கள் எதிர்வரும் 22ம் திகதி வரை இலங்கை கடற்பரப்பில் தரித்திருக்கும். எதிர்வரும் திங்கட்கிழமை திருகோணமலைக்கு பயணம் செய்வதற்காக கொழும்புத்துறைமுக எல்லைக்குள் பிரவேசித்த இந்தியக்கப்பல்களை கடற்படை மேலதிகாரியான கொமடோர் ஜெயந்த பெரேரா வரவேற்றார். (க-60)

# சிறுவனுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

13வயது சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் 15வயதுச் சிறுவன் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ்மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

கடந்த முதலாம் திகதி குருநகரில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. சிறுவனை இம்மாதம் 14ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படியும் சிறுமியை வைத்திய அதிகாரியிடம் சோதனைக்குட்படுத்துமாறும் மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் உத்தரவிட்டுள்ளார். (ச-19)

# வெட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு மருதானைப்பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலத்தை மருதானைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ் இளைஞனின் உடல் துண்டுகளாக வெட்டப்பட்டு இரண்டு உரைப்பைகளில் கட்டப்பட்டிருந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

30 வயது மதிக்கத்தக்க இவ் இளைஞனின் தலை மற்றும் கை கால்கள் வெட்டப்பட்டு ஒரு உரப்பையில் போடப்பட்டு குப்பை மேட்டில் போடப்பட்டிருந்ததாக தெரிவிககப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மருதானைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-9)

# அரசு சமாதான முயற்சிகளை தடையின்றி மேற்கொள்ளும்

## டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் எவ்வித தடையுமின்றி சுமுகமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென பிரதியமைச்சர் மன்றத்தின் தலைவர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான நடைமுறையினை யதார்த்த பூர்வமான முறைக்கு கொண்டுவருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

ஆனால் அவரின் முயற்சிக்கு அரசாங்கத்தில் அங்கம்வகித்து அரசினை எவ்வித முயற்சியையும் மேற்கொள்ளாவிடாமல் தடுக்கும் ஜே.வி.பி இதனையும் எதிர்த்து வருகின்றது.

ஜே.வி.பியின் இவ்வாறான முயற்சிகளைக் தட்டிக்கேட்க எவரும் இல்லையா? எனக் கேள்வி எழுப்பினார்.

ஆனால் எப்படியிருப்பினும் ஜனாதிபதியின் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான முயற்சியில் அனைத்து உதவிகளையும் வழங்கப்போவதாக அவர் தெரிவித்தார். (04)

# வடமராட்சி கிழக்கில் அபிவிருத்தி மாநாடு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திதொடர்பான மாநாடு ஒன்று நேற்று கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தலைமையில் நடைபெற்றது.

மருதங்கேணி பொதுமண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியேற்றம்,

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்களை வழங்கல் எனபன தொடர்பாக ஆராயப்பட்டது.

(ச-43)

# 'ஆனந்த வாழ்வுக்கான திறவுகோல்'

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீகல்கி பகவானின் 57வது ஜென்ம தினத்தை முன்னிட்டு இலங்கை ஸ்வர்ணயுக அமைப்பகம வழங்கும் 'ஆனந்த வாழ்விற்கான திறவுகோல' நிகழ்வு இன்று பிற்பகல் 3மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி சுப்பிரமணிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(ச-8)

## பீற்றர்...

நேற்று கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து காலி முகத்திடல் வரையும் இடம்பெற்றது. ஊர்வலத்தின் இறுதியில் உலகவங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்டின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

இதுதவிர தமது கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் மனு ஒன்றினை உலக வங்கியின் தலைமையகத்திற்கும் அனுப்பி வைக்க முடிவு எடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த எல்லே குணவன்ச தேரர், உலகவங்கியின் பிரதிநிதி உள்நாட்டு விவகாரங்களில் அநாவசியமாக தலையிடுகின்றார். இதன்மூலம் இலங்கையின் இறைமை மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றது எனத் தெரிவித்தார்.

இதேவேளை அங்கு கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தனி நாட்டினை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளில் உலக வங்கியின் பிரதிநிதி முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதனைச் சகலதரப்பினரும் எதிர்க்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். (ச-04)

## மாவின்...

ப. கனகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் மேற்குறிப்பிட்ட விலையைப் பின்பற்றுமாறு அவர்கேட்டுக் கொண்டுள்ளார்.(ச)

## மட்டக்களப்பில்...

மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனையடுத்து அந்தப் பிரதேசத்தில் உள்ள கடைகள், சந்தைகள் மற்றும்அரச, தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூட்ப்பட்டு ஆங்காங்கே வெள்ளைக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. பாடசாலைகளும் இயங்கவில்லை. உள்ளூர் போக்கு வரத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தபோதிலும் இந்தப் பிரதேசங்கள்ஊடான வெளியூர் போக்கு வரத்துசேவைகள் வழமைபோல் நடைபெற்றன. (ச-04)

## நீர்வேலி இராணுவ...

இதனையடுத்து இராணுவத்திற்கு எதிராககிளர்ந்தெழந்த மக்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தியதுடன் வீதிக்குக்குறுக்கே ரயர்களை போட்டு எரித்தனர். இதனால் பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் தலைமையிலானகுழுவினர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாயான விமல்ரத்தின என்பவரை இராணுவப் பொலிஸார் ஊடாக கைதுசெய்தனர்.

பிரஸ்தாப சிப்பாய் காங்கேசன்துறைப் பகுதியில் கடமையாற்றுபவர் என்றும் அவர் இதற்கு முன்சம்பவம் இடம்பெற்ற வில்லுமதவடிஇராணுவ முகாமில் கடமையாற்றியவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். அச்சிப்பாய் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பெண் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமை ஆணைக்குழு என்பவற்றில் முறையிட்டுள்ளார்.இதேவேளை நேற்றிரவு 7 மணியளவில் வில்லுமதவடி இராணுவ முகாமைச் சுற்றி வளைத்த மக்கள் அங்கிருந்த காவலரணை தீ வைக்க முற்பட்ட வேளை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். எனினும்மக்கள் தமது எதிர்ப்பைக்காட்டினர் நேற்று மதியம முதல்இரவு வரைபருத்தித் துறை ஊடானபோககுவரத்து தடைப்பட்டிருந்தது.

(ச-43-74-7)

## அரசுடன் ஒப்பந்தம்...

நோர்வேயின் விசேடதூதுவர் எரிக்சொல்ஹெய்முடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யுத்தநிறுத்தத்திற்கு முன்பே புலிகளிடம் சிறியரக விமானங்களும் விமான ஓடுபாதைகளும் இருந்தன. இந்நிலையில் சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் ஊடாக அரசின் உலங்கு வானூர்தி பறந்ததாலேயே இதுதொடர்பான விடயம் அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெரியவந்துள்ளதாக அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் கூறியதாக சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

சமாதான காலத்திலேயே விடுதலைப்புலிகள் விமானங்கள் கொள்வனவு செய்தார்கள் என்ற அரசின் கூற்றை அன்ரன் பாலசிங்கம் மறுத்ததாக சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளிடம் ஒரு சில விமானங்களும் விமான ஓடுபாதைகளும் இருப்பது தமக்கு தற்போது தெரியவந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு விமான ஓடுபாதையையும் ஒன்றிரண்டு விமானங்களையும் வைத்திருப்பதாகவும் எங்களுக்கு தற்போது தெரியவந்திருக்கின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருக்கின்ற நிபந்தனைகளைப் பயன்படுத்திக் கொண்டு அதை எங்களிடம் இருந்துமறைத்து வைததிருக்கின்றார்கள்.போர்நிறுத்த ஒப்பந்தம் நூறுசதவீதம் கடைப்பிடிக்கப்படுகின்றது என்று இராணுவத்தினர்கள் எதிர்பார்ப்பார்கள் என்பதை விடுதலைப்புலிகள் தங்களுக்கு சாதகமாகப்பயன்படுத்திக் கொண்டு விமானப்படை என்ற ரீதியில் தமது திறனையும், ஆட்களையும் மேம்படுத்திக் கொள்ள முயன்று வந்திருக்கின்றார்கள் என பிரிகேடியர் தயாரட்ணாயக்க குற்றஞ் சுமத்தியுள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் விமான ஓடுபாதை இருந்தமையை நாம் கண்டுபிடித்திருந்தால் இருந்த இடம் தெரியாமல் அழித்திருப்போம் என அவர் கூறினார். இத்திறனையும் ஆற்றலையும் போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்புதான் அவர்கள் அடைந்திருக்கிறார்கள் எனத்தெரிவித்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் என்ற ஒன்று கையெழுத்தாகி இருக்கும் போது அதனை மதிக்க வேண்டும் எமது தரபில் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் நாங்கள் இணங்கியிருந்த நிபந்தனைகள் எல்லாவற்றையும் நாங்கள் 100சத வீதம் கடைப்பிடித்து வந்திருக்கிறோம் என அவர் மேலும் கூறினார்.

(ச4)

## தமிழ்ச்செல்வன்...

செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார். இந்த விஜயத்தின் ஒரு கட்டமாக பிரசல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்திற்கும் இவர்கள் விஜயம் செய்யவுள்ளனர்.

இக் குழுவினர் இன்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரை இன்று சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விஜயத்தின்போது பின்லாந்து வெளிவிவகார அமைச்சர் ஜேர்மனியின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரங்களுக்கான ஆணையாளரையும் சந்திக்கவுள்ளதாக புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

(ச)


யாழ் மண்ணில் முதன் முறையாக

தொலைத் தொடர்பு பொறியியல் (Telecom Enginnering) பயிற்சி நெறி காலம் 3மாதம்

குறுகியகால முடிவில் (TelecomField) இல்வேலை வாய்ப்புக்களுடன் கூடிய (O S P Constuction) ரெலிகொம் கேபில் கட்டுமானப் பயிற்சி நெறி ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே! பதிவுகளுக்கு முந்துங்கள்!

பயிற்சி நெறிக்கட்டணம் ரூபா 5000 மட்டுமே!

ஏனைய பயிற்சி நெறிகள்

மொபைல் போன் தொழிநுட்பம் திருத்த வேலைகள் (Lock) உடைத்தல் 3 மாதம் 8500/=

Computer Hardware 3 மாதம் 6000/=
Computer Networking 3 மாதம் 6000/=

NORTH EAST TELECOM (PVT) LTD
No.34, SADDANATHAR ROAD, NALLUR,
Jaffna. T.P: 021 222 3786
(C1162)









